183
183

திருக்குறள்
கடவுள் வாழ்த்து
லட்சியார்த்த விளக்கம்
[illegible] ஸ்வாமிகள்

TIRUKKURAL KADAVUL VALTU LADCIYARTA VILAKKAM

TIRUVALLUVAR

0.31.B6T,T:9
(G:31)
[J7]

பிரம்மமே சத்தியம்.

திருக்குறள்

கடவுள் வாழ்த்து

லட்சியார்த்த விளக்கம்.

தமிழ் நாட்டுத் தத்துவ ஞானி

திருவாரூர்

ஸ்ரீகுரு கிணகர் சுவாமிகள்

அருளிய

திவ்விய உரை.

திருவாரூர்

பிரம்ம வித்தியா பீடம்.

1954-வது ஆண்டின் முதலாவது வெளியீடு.

முன்னுரை.

தீர்க்கதரிசியான திருவள்ளுவர் அருளிய திருக்குறள்–கடவுள் வாழ்த்து—அதிகாரத்திற்கு லட்சியார்த்தம் விளங்காமல் எழுத்திலக்கண அடிப்படையில் பலவாறாக அர்த்தம் செய்துகொண்டு உருவாதீதமான கடவுளின் அனுபவம் கைவல்யமாகாது கடவுளை உருவமாக கற்பனை செய்து பேச்சளவில் கடவுளைப் பற்றிப் பிரமாதமாகப் பேசிக் காலங் கடத்துகின்றார்களே! கடவுளைப் பற்றி விளக்கம் செய்யும் முதற்குறளிலுள்ள மறைந்து போன லட்சியார்த்தத்தையும், ஏனைய ஒன்பது குறள்களின் உண்மைத் தத்துவத்தையும் மீண்டும் விளக்கம் செய்து உலக மக்களை உய்விக்க வேண்டுமென்று வள்ளுவப் பெருந்தகையின் சூட்சம சமஸ்காரமே **கிணகர் சுவாமிகளென்ற** மாற்றுப்பெயரில் அவதரித்து கடவுள் வாழ்த்து—அதிகாரத்தின் லட்சியார்த்தத்தை அனுபவப்பூர்வமாக விளக்கம் செய்கின்றதோவென்று அதிசயப்படக்கூடிய அளவில் எந்தப்புலவர்களாலும், எந்த இலக்கண நிபுணர்களாலும், எந்த சாஸ்திரப் பண்டிதர்களாலும், எந்த சமயவாதிகளாலும், ஏனையோர்களினாலும் இதுவரை கண்டுபிடிக்கப்படாமலிருந்த கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் முதற்குறளில் பொதிந்து கிடந்த கடவுளின் அந்தரார்த்த அனுபவ லட்சியத்தையும், ஏனைய ஒன்பது குறள்களில் வள்ளுவப் பெருந்தகை சூட்சமமாக வைத்திருந்த எழுத்திலக்கணங்கடந்த நுண்ணிய கருத்துகளையும் பொது புத்தியுடைய யாரும் எளிதில் புரிந்து புனிதமடையும் வகையில் **தமிழ் நாட்டு தத்துவ ஞானியான குருநாதர் கிணகர் சுவாமிகள்** சேலம்–குகை–திருவள்ளுவர் கழகத்தில் செய்த பிரசங்கத்தை புத்தக உருவாகஆக்கி **திருவாரூர் பிர்ம வித்தியா பீடத்தினின்று** வெளியிட்டுள்ளோம். தமிழ் நாட்டவரும், ஏனைய நாட்டினரும் உணர்ந்து உய்ய வேண்டி சுவாமிகளால் பரிசாக அளிக்கப்பட்ட இந்த

அபூர்வமான கடவுள் (விளக்க) வாழ்த்து பிரத்தியட்ச லட்சியார்த்த அனுபவ விளக்கமான ஞானப் பிரசாதத்தை பொது புத்தியினால் உண்டு களித்து உருவாதீதமான தெய்வ உண்மையை தெரிந்து, தெளிந்து ஜீவன் முக்த நிலையில் நிலைப்பீர்களாக!

இங்ஙனம்,
சுவாமிகளின் சிஷ்யர்கள்,

M. S. வாஸன், காரியதரிசி, பிர்ம வித்தியாபீடம், விஜயபுரம்-திருவாரூர்.

சு. சி. அருணாசலம், அருப்புக்கோட்டை.

முருகேசன், பள்ளூர் – காஞ்சிபுரம்.

R. குப்புசாமி, புலிவலம்.

முத்துக்காமு, குருந்தமடம்.

சாதுராஜப்பா, தில்லைவிளாகம்.

சுவாமிகளின் உபதேச மொழிகளில் சில.

1. மனிதனாகப் பிறப்பது பெரிது. ஆனால் மனித அறிவோடு வாழ்வது மகா அரிது.
2. கடவுளென்பது ஆளைப் போன்றதல்ல. அது எல்லாவற்றிலும் வியாபித்திருக்கும் சர்வ வல்லமையுள்ள ஓர் சக்தியாகும்.
3. பள்ளிப் படிப்பானது வயிற்றுப் பிழைப்பிற்கான சின்னப் படிப்பேயாகும்.
4. கல்வி அறிவை விட அனுபவ அறிவே மனிதனை ரட்சிக்கும் கடவுளாகும்.
5. ஒரு மனிதனின் தரத்தைக் கண்கள் பார்வையைக் கொண்டு மதிப்பிடாதே. அது மூடத்தனம்.
6. தெய்வம் மதம் கடந்தது, அதை நீ தெரிந்து, தெளிந்திருந்தவேண்டுமானால் மதப் பிடிப்பிலிருந்து உன்னை விடுவித்துக்கொள்.

பேரன்பர்களே! தர்மசாஸ்திரக் கர்த்தரான தமிழ்த்தாதை வள்ளுவப் பெருந்தகையின் உள்ளக் கிடக்கையினின்று உருவான திருக்குறளில் முதற்குறளான கடவுள் வாழ்த்தில் புதைந்து கிடக்கும் ஆழ்ந்த சுயானுபவ தத்துவத்தையும், கடவுள் வாழ்த்திலுள்ள ஏனைய ஒன்பது குறள்களினுடைய அறிதற்கரிய உண்மையையும் கேட்டு தெரிந்து, தெளிந்து இருந்த வேண்டுமென்ற ஆர்வத்தோடு திரளாகக் கூடியுள்ள உங்களெல்லோருக்கும் எனது நன்றி கூர்ந்த எதார்த்த ஆசி நல்குமாக.

நாம் தமிழ்நாடு பல பகுதிகளில் சமயாதீத தெய்வ (ஆத்மீக) உண்மைகளையும், பக்தியின் தத்துவங்களையும், ஆலய வழிபாடு, ஆராதனை செய்வதின் அந்தரார்த்தங்களையும், பிரசங்க வாயிலாகவும், துண்டுப்பிரசுர வாயிலாகவும், சிறியசிறிய நூற்கள்வாயிலாகவும், நம்மால் ஸ்தாபிதம் செய்யப்பெற்ற பிர்ம வித்தியா பீடத்தின் சார்பில் ஆஸ்தீக அனுபவப் பிரச்சாரம் செய்து வருகின்றோமென்றாலும், சேலம் நகரத்திற்கு நாம் உபன்னியாசம் செய்ய வந்தது இதுவே முதல் முறையாகும். சேலம்–குகை–சமரஸ சன்மார்க்க சங்க அன்பர்கள் சமரஸம் என்பது பற்றி ஒரு பிரசங்கம் செய்துவிட்டு வந்துவிடலாமென்று அழைத்து வந்தார்கள். ஆனால் மறு தினம் கீதா தத்துவம் என்பதுபற்றி பிரசங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அன்பர்கள் விருப்பப்படி மறுதினம் கீதாதத்துவம் என்பதைப்பற்றி பிரசங்கம் செய்தோம். நேற்று உபன்னியாசம் முடிந்ததும் திருக்குறள் கழக அன்பர்களும் இரண்டு தினங்களாக நமது உபன்னியாசத்தை தொடர்ச்சியாக கேட்ட ஏனைய அன்பர்களும் ஒன்று சேர்ந்து நம்மிடம் வந்து உங்கள் பிரசங்கம் எளிய நடையில் அனுபவப் பூர்வமாக கேட்பவர்கள் நன்கு விளங்கிக் கொள்ளும் வகையில் தெளிவாக இருக்கிறது. ஆகையால் நாளை திருக்குறள் கழக சார்பில் குறளிலுள்ள கடவுள் வாழ்த்துத் தத்துவத்தை விளக்கி ஒரு பிரசங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அன்பர்கள் விருப்பத்திற்கிணங்கினேன். அதன்படி இன்று வள்ளுவர்

கண்ட கடவுளைப்பற்றி, கடவுள் வாழ்த்து அதிகாரத்தைப் பற்றி உங்கள் முன்பு பிரசங்கம் செய்யப் போகின்றேன்.

இன்றைய பிரசங்கம் உங்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும், புதுமையாகக்கூடத் தோன்றும், என்ன? கடவுள் வாழ்த்து பத்துக் குறளுக்கும் இதுவரை யாரும் இப்படி விளக்கம் செய்ததில்லையே என்று ஆச்சரியப்படவும் செய்வீர்கள். பொது புத்தியோடு சிந்திக்கும் சக்தியற்றவர்கள் ஆத்திரப்படவும் செய்வார்கள். நான் விளக்கம் செய்யப் போவது புதியவை அல்ல, ஆனால் இதுவரை யாரும் விளக்கம் செய்திராத வள்ளுவப் பெருந்தகையின் இலக்கணரீதமான ஆழ்ந்த அனுபவ லட்சியங்களேயாகும். எனவே பேரன்பர்களே! பிரசங்க வாயிலாக நாம் செய்யும் வள்ளுவப் பெருந்தகையின் கடவுள் வாழ்த்து லட்சியார்த்த விளக்கத்தை சார்பற்ற பொது புத்தியோடு கிரகித்து வள்ளுவர் கண்ட தெய்வானுபவ உண்மையை உணர்ந்து திருப்த சொரூபிகளாய்த் திகழ்வீர்களாக.

பேரன்பர்களே! பெரும்பாலும் ஆஸ்தீக நூலாசிரியர்கள் இயற்றிய நூற்களிலெல்லாம் முதலில் ஐங்கரன் தாள் சரணமென்றும், கரிமுகன் காப்பென்றும் கடவுளை உருவகப் படுத்தியே கடவுள் வணக்கம் கூறியுள்ளார்கள். ஆனல் ஆஸ்தீகர்களுக்கெல்லாம் ஆஸ்தீகரான வள்ளுவப் பெருந்தகையோ தனது திருக்குறளின் கடவுள் வாழ்த்து முதற் குறளில் ஏனைய நூலாசியர்களைப்போல் கடவுளை உருவகப்படுத்தி கடவுள் வாழ்த்துக் கூறவில்லை. உருவாதீதமான கடவுளின் உண்மைத் தத்துவத்தை நிரூபித்தே கடவுள் (விளக்கம்) வாழ்த்துக் கூறியுள்ளார். எனவே உருவாதீதமான கடவுளின் உண்மைத் தத்துவத்தை நிரூபிக்கும் முதற் குறளை சிந்திப்போம்.

திருக்குறள்

கடவுள் வாழ்த்து

லட்சியார்த்த விளக்கம்.

"அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு"

எழுத்துக்களுக்கெல்லாம் 'அ' என்ற எழுத்து முதன்மையாக இருக்கிறது மேலும் 'அ' என்ற எழுத்தி லுள்ள அங்கங்களே மற்ற எல்லா எழுத்துக்களிலும் இருக் கிறது. 'அ' என்ற எழுத்து இல்லையேல் மற்ற எழுத்துக் கள் தோன்றுவதற்கில்லை. 'அ' என்ற எழுத்தின் அங்கங் கள் மற்ற எழுத்துக்களில் இல்லாவிட்டால் எழுத்துக்கள் உச்சரிப்பதற்குமில்லை.

எழுத்துக்களுக்கெல்லாம் முதலாக உடைய 'அ' என்ற எழுத்தைக்கொண்டே மற்ற எழுத்துக்களெல்லாம் எப்படி உண்டாகியிருக்கிறதோ, 'அ' என்ற எழுத்தில்லா விட்டால் மற்ற எழுத்துக்கள் எப்படி உண்டாக முடியாதோ அப்படியே உலகிற்கு **ஆதி பகவனை** பரம்பொருள் முதலாக இருக்கிறது.

உலகத்திற்கு முதலான பரம்பொருளைக் கொண் டே உலகமும், உலகத்தில் காணக்கூடிய அவ்வளவும் தோன்றியிருக்கிறது. எங்கும் நிறைந்த **ஆதி பகவனை** பரம்பொருள் இல்லாமல் உலகம் தோன்றுவதற்கில்லை.

கேள்வி

எழுத்துக்களுக்கெல்லாம் 'அ' என்ற எழுத்து முதலாகவும் இருக்கிறது. அதே 'அ' என்ற எழுத்தின் அங்கங்கள் மற்ற எழுத்துக்களிலும் இருப்பதுவும் தெரி

கிறது. இதுபோல் உலகமும் உலகத்திற்கு முதலாக உள்ள கடவுளும் தெரியவேண்டுமே. உபமானத்தில் கூறுகிறபடி இல்லையே. உலகம் தெரிகிறது, உலகத்திற்கு முதலாக உள்ள கடவுள் தெரியவில்லையே. இதை எப்படி ஒப்புக் கொள்வது? கடவுள் முதற்றே உலகு என்பதை எப்படி நிட்சயிக்க முடியும்?

பதில்

அறத்துப்பாலிலுள்ள முதற் குறளை வாசிப்பவர்கள் கடவுளின் உண்மை நிலையை (ஆதிபகவனின் அமானுஷ்ய நிலையை) புரிந்துகொள்ள முடியாதவர்களாய், இறைவனின் உண்மை நிலையை உணர்வதற்கு ஆரம்ப பாடசாலையைப் போன்றதான மதங்களிலிருந்து உருவான ஆகம, இதிகாச, புராண காவியங்களையும், ஆலயத்தோற்ற ஆடம்பரங்களையும் துணையாகக்கொண்டு மொந்தாகாரமான நினைவில் அவரவர் கருத்திற்குத் தக்கவாறு கடவுளை கற்பனை செய்து உரை எழுதியுள்ளார்கள். உரை எழுதிக்கொண்டும் வருகிறார்கள்! இதனாலேதான் வள்ளுவப் பெருந்தகை முதற்குறளில் சமயாதீதமான இறைவனைப் பற்றிக் கூறும் அந்தரார்த்த லட்சியத்திற்கு எழுத்திலக்கணங் கடந்த ஆராய்ச்சி அனுபவப் பூர்வமான விடை கிடைப்பதில்லை. இப்படி ஆராய்ச்சி அனுபவப்பூர்வமான விடை கிடைக்காத நிலையிலேயே வள்ளுவப் பெருந்தகையின் முதற்குறளைப் படிப்பவர்கள் சமயாதீதமான உருவமற்ற இறைவனின் அமானுஷ்ய நிலையை ஆராய்ச்சி அனுபவப் பூர்வமாக உணர்ந்து அறியாமையைப்பற்ற அகவிழிப்பு அடைவதுமில்லை.

எனவே வள்ளுவப் பெருமான் அருளிய அறத்துப்பால் முதற் குறளுக்குரிய லட்சியார்த்தப் பொருளை சுருதி, யுக்தி, பிரத்தியட்ச அனுமான அனுபவ ரீதியாய் விளக்கமாக எடுத்து விவரிப்பதால் மக்கள் உலகத்தையும், உலகத்திற்கு முதலாக உள்ள பரம்பொருளான பகவனையும் கருத்துக் கண்கொண்டு கண்டு உய்வதற்கு ஏதுவாக இருக்குமென்ற நன்னோக்கங்கொண்டே இந்த மேலான ஆதிபகவ

னின் அமானுஷ்ய நிலையை எழுத்திலக்கணங் கடந்து இலட்சிய இலக்கண அனுபவ ரீதியாய் விளக்கம் செய்யப் படுகிறது.

ஆதிபகவனின் அமானுஷ்ய நிலை.

உருவமற்று, பேதமற்று, சொச்சமற்று, சத்திய சக்தி சொரூபமாய், சமயாதீதமாய், எல்லாம் வல்லதுமாய், எல்லாமாய் எங்கும் நிறைந்திருப்பதுவே ஆதிபகவனின் அமானுஷ்ய நிலை.

இத்தகைய உருவமற்ற ஆதிபகவனை பரம்பொருளிடமிருந்தே காற்றும், தீயும், நீரும், நிலப் பரப்பான இந்த பூமியும், பூமியிலுற்ற எண்ணற்ற ஜீவ உருவ வேறுபாடுகளும் தோற்றல் மாத்திரத்தில் தோன்றிக் கொண்டிருக்கிறது.

கேள்வி

உருவமில்லாத ஆதிபகவனை பரம்பொருளிடமிருந்து உருவமான இந்த உலகம் உண்டாகமுடியுமா?

பதில்

முடியும்.

கேள்வி

எப்படி முடியும்?

பதில்

உருவமான ஒவ்வொன்றும் இறுதியில் உருவமில்லாமலே ஆகிவிடுகின்றது. இதை அனுபவப் பூர்வமான உதாரணத்தைக் கொண்டே நிரூபிக்கிறேன். அன்பர்களே இதோ உருவமாக என்கையில் காகிதம் இருக்கிறது. இப்பொழுது பாருங்கள், தீக்குச்சியை பொருத்தி காகிதத்

தில் வைக்கின்றேன். காகிதத்தில் தீ வைத்தவுடன் காகிதம் முன்பிருந்த தெளிவான தூல நிலை மாறி இப்பொழுது அதை விட சூட்சமமான நிலை அடைந்து விட்டது.

இதில் ஒரு சிறு பகுதியை எடுத்து உங்கள் முன்பே கையில் வைத்துத் தேய்க்கின்றேன். இதோ பாருங்கள் கண்களுக்குத் தெரியக்கூடிய அளவில் சூட்சமமாக இருந்த காகித சாம்பல் எங்கே? கண்ணுக்குத் தெரிந்த காகித சாம்பல் கையில் வைத்துத் தேய்த்தவுடன் கண்களுக்குத் தெரியாமல் உருவமற்று போய்விட்டது. இப்படியேதான் இந்த பூமியும் பூமியிலுற்ற சர்வமும் இறுதியில் உருவ மற்றுப் போய்விடும்.

கேள்வி

சிருஷ்டியிலிருக்கும் இந்த பூமியும், பூமியிலுற்ற சர்வ வஸ்துக்களும் இறுதியில் எப்படி உருவமற்றுப் போய்விடும்?

பதில்

சிருஷ்டியின் மறைவு.

சிருஷ்டியிலிருக்கும் இந்த பூமியும், அதிலுற்ற எண்ணற்ற தோற்றங்களும் இறுதி காலத்தில் கடல் நீரால் சிறுகச் சிறுக விழுங்கப்பட்டு பூமி முழுவதும் கடல் நீரால் மூழ்கடிக்கப்பட்டு கடல் நீரின் நீண்ட கால இயக்க வேகத்தால் பூமியானது சிறுகச் சிறுக கரைக்கப் பட்டு பூமி முழுவதும் ஜலமயமாகிவிடும். பிறகு பூமியை தன் மயமாக்கிக்கொண்ட நீர்க்கோளமானது சூரியாக்கினியின் உத்கிருஷ்ட உஷ்ண சக்தியின் இயக்க ஸ்வீகரிப்பால் சூரியனின் சொரூபமான அக்கினி கோளமாகிவிடுகிறது. பிறகு சூரியனை அக்கினி கோளமானது சமஷ்டிப் பிராணனால் இயக்குவிக்கப்பட்ட அணுக்கள் இயக்கத்தினின்று தோன்றும் வாயுவின் உத்வேகத்தால் சிதறடிக்கப்பட்டு அணுக்கள் மயமாக ஆகிவிடுகிறது. பிறகு சமஷ்டிப் பிராணனானது தனது உத்கிருஷ்ட சூட்சம மின்சக்தியினால் அணுக்கள் ஜட

நிலையற்றுப்போக தன் மயமாக்கிக் கொள்ளுகிறது. பிறகு சக்தி சொரூபமான பரம்பொருள் தனது அவ்யக்த இயக்க சக்தியினால் சமஷ்டிப் பிராணனை ஆகாயத்திலொடுங்கும்படியாக, ஆகாயமாகும்படியாக செய்து விடுகிறது. இப்படி பூதங்களையும் பூத பௌதீக உலகத் தோற்றங்களையும் ஒன்றில் ஒன்று ஒடுங்கும்படி செய்த ஆகாய அதீத ஆதிபகவனான பரம்பொருள் பிறகு ஆகாயத்தை ஸ்வீகரித்து தானே தானாய் தோற்றமற்று சுயம் சக்தி மாத்திரமாய் விடுகிறது.

இத்தகைய உருவமற்ற, சக்தி சொரூபமான ஆதிபகவனின் அத்யாத்ம பரம ரகசியமான அமானுஷ்ய நிலையை எல்லோரும் எளிதில் விளங்கிக் கொள்ளுவதென்பது இயலாத காரியமாகும்.

வேறு யாருக்கு விளங்கும்.?

உருவமற்ற சக்தி சொரூபமான ஆதிபகவனின் அமானுஷ்ய நிலையை நோக்கி விஞ்ஞானிக்கும் மேலான விஞ்ஞானியாய் துணைக் கருவிகள் இன்றி சுய ஆராய்ச்சி செய்து சுயானுபவத்தில் தெரிந்து ஆதிபகவனே தனது வாஸ்த்தவ சொரூபமென்று தெளிந்த ஞான விஞ்ஞானிகளான தத்துவ ஞானிகளுக்குத் தான் விளங்கும்.

சிருஷ்டி

இப்படி பூதபௌதீக உலகத் தோற்றம் அனைத்தையும் ஒன்றில் ஒன்று ஒடுங்கும்படியாக செய்து இறுதியில் தோற்றமற்று சுயம் சக்தி மாத்திரமாயுள்ள ஆதிபகவனான பரம்பொருளானது சிருஷ்டி காலத்தில் தனது வியாபக ஏகதேசத்தில் தானே தன்னில் வேறுபடாமல் தனது வியக்த இயக்க சக்தியினால் ஆகாயமாகத் தோன்றியது. பிறகு ஆகாயமாகத் தோன்றிய வியக்த இயக்க சக்தி சொரூபமான பரம்பொருளே ஆகாயத்தின் ஏகதேசத்தில் தானே தன்னில் வேறுபடாமல் சமஷ்டிப் பிராணன் என்ற பெயரில் தோன்றியது. பிறகு பிராணன் என்ற பெயரில் தோன்றிய பரம்பொருளே தானே தன்னில் வேறுபடாமல் தன்னில்

ஒரு பகுதியை தூல உலக சிருஷ்டிக்கான பரமாணுக்களாக சிருஷ்டித்துக்கொண்டு அணுக்களை இயக்கும் சக்தியாகவும் ஆகிக்கொண்டது. பிறகு சமஷ்டிப் பிராணனால் அணுக் கள் இயங்க ஆரம்பிக்கவே, அணுக்கள் இயக்க உத்வேகத்தி லிருந்து ஆவேசமான காற்று உண்டாயிற்று. காற்றின் பகிர்முக உத்வேக சுழற்சி இயக்கத்தினால் பந்திக்கப்பட்ட அணுக்கள் உராசுதலினின்று ஒளியோடு கூடிய உருவா காரமான அக்கினி கோளமாயுள்ள சூரியன் தோன்றியது. எங்கும் நிறைந்த சர்வ வல்லமையுள்ள உருவமற்ற பரம் பொருளானது தனக்குத் தானே வேறுபடாமல் தோற்ற மாத்திரத்தில் சிருஷ்டித்துக்கொண்ட சுய அக்கினி கோள மான சூரியனின் சொல்லொணா இயக்கத் தெறிப்பிலிருந்து மற்றொரு சுயாக்கினி கோளம் வெளிப்பட்டது. சூரிய னிலிருந்து வெளியான அக்கினி கோளமானது சூரியனின் இழுப்புச் சக்தியால் கோடிக்கணக்கான வருஷங்கள் இயங்கி உள்பாகம் அக்கினி கோளமாகவும், மேல் பரப்பு நீர்க் கோளமாகவும் ஆகியது. பிறகு நீர்கோளத்தின் இயக்கத் தெறிப்பிலிருந்து மற்றொரு நீர்க்கோளம் வெளியா யிற்று. வெளியான அந்த நீர்க் கோளமானது பெரிய நீர்க் கோளத்தின் இழுப்பு சக்தியால் கோடிக் கணக்கான வருஷங்கள் இயங்கி இறுதியில் பனி பிண்டமான சந்திரனா யிற்று அதுதான் நாம் பார்க்கும் சந்திரனாகும். முன்னர் அக்கினி கோளமான சூரியனிலிருந்து வெளியான உட் பாகத்தில் அக்கினி கோளமாகவும், மேல் பரப்பில் நீர்க் கோளமாகவும் ஆன நீர்க் கோளமானது கன மிகுதியால் காலக் கிரமத்தில் இயக்க வேகம் குறைந்து நீர்ப் பரப்பின் இடை இடையே நீர்தடிப்பால் நிலப் பரப்புக்கள் தோன் றிற்று. பிறகு உருவமற்ற சக்தி சொரூபமான எங்கும் நிறைந்த ஆதிபகவனான பரப்பொருளே தனக்குத் தானே சிருஷ்டித்துக்கொண்ட நிலப்பரப்பிலிருந்து தோற்றல் மாத் திரத்தில் எண்ணிறந்த புல் பூண்டு செடி கொடி மரம் மலை மனிதர் ஈறாக உள்ள மற்றைய ஜீவ தோற்றங்களாகவும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. மேலும் ஆகாய வீதியில் நட்சத்திரங்களென்று நாம் பார்க்கின்ற அண்ட கோடிகளெல்லாம் பற்பல வகையுடையதாக அனாதி சக்தி

யாகிய ஆதிபகவனின் அமானுஷ்ய சிருஷ்டியால் உருவாக்கப்பட்டு ஒன்றை யொன்று ஆகர்ஷித்து ஆகாய வீதியில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த ஆழ்ந்த கருத்தை நிரூபித்தே **தாயுமான சுவாமிகள்** கூட "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்த தெது; தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடியெல்லாம் தங்கும்படிக்கு இச்சை வைத்துயிர்க்கு யிராய் தழைத்த தெது" என்று அருளுகின்றார்.

இந் நிலையில் பார்க்கப்படும் எல்லா நாம ரூபங்களையும் சுய ஆராய்ச்சி ரீதியில் (சுய விஞ்ஞான வாயிலாய்) அநுபவத்தில் உணரும் பொழுது பல்வேறு உருவங்களாகவும், பார்க்கப்படும் உலகமாகவும் எங்கும் நிறைந்த உருவமற்ற ஆதிபகவனென பரம்பொருளே விளங்குகின்றதென்பது தெளியக் கிடக்கின்றது.

பேதமற்ற சர்வ வல்லமையுள்ள எங்கும் நிறைந்த ஆதிபகவனென பரம்பொருளே அதன் உண்மை விளங்காத புத்தியுடையவர்களுக்கு பூதமாகவும், பௌதீகமாகவும், அதாவது உலகமாகவும், உலகத்துற்ற எண்ணறிய ஜீவ பேதங்களாகவும் வேறு வேறாக வாஸ்தவம் போல் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

எங்கும் நிறைந்த சர்வ வல்லமையுள்ள உருவமற்ற ஆதிபகவனென பரம்பொருளே தோற்றல் மாத்திரத்தில் உலகமாகவும், உலகத்துற்ற மனிதர் முதல் மற்றைய ஜீவர்களாகவும் இருக்கிறதென்ற ஆதிபகவனின் அமானுஷ்ய ஆழ்ந்த ரகசியத்தை ஆராய்ச்சி அனுபவப் பூர்வமாக உணர்ந்துதெளிந்த திவ்விய புருஷனாக வள்ளுவப் பெருமான் இருந்ததினாலேயே அவர் எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் (அ) எப்படி முதலாக இருக்கிறதோ "அ" என்ற எழுத்தின் அங்கங்களினாலேயே மற்றையஎழுத்துக்களெல்லாம் எப்படி தோன்றியுள்ளதோ அப்படியே எங்கும் நிறைந்த உருவமற்ற சாட்சாத் பகவானென ஆதி பரம்பொருளே உலகத்திற்கு

முதற் பொருளாகவும் இருக்கிறது. உலகமாகவும் இருக்கிறது என்ற சூட்சும தத்துவத்தை நிரூபித்தே

"அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி பகவன் முதற்றே உலகு" என்று

அறத்துப்பால் முதற்குறளில் அருளிச் செய்கின்றார்.

கடல் நீரானது எப்படி தனது உருவமில்லாத வேற்றுருவம் போன்று உப்பை சிருஷ்டிக்கின்றதோ அப்படியே பகவனை ஆதி பரம்பொருள் தனது வியாபகத்தில் தனக்கு அன்னியமானது போன்று உலகத்தை சிருஷ்டித்துள்ளது. எப்படி உப்பும் நீரும் பார்வைக்கு வேறு வேறாகத் தோன்றினாலும் வாஸ்த்தவத்தில் உப்பும் நீரும் எப்படி ஒன்றாகவே இருக்கிறதோ அப்படியே பகவனை ஆதி பரம்பொருளும் உலகமும் வேறு வேறாகத் தோன்றினாலும் வாஸ்த்தவத்தில் ஞான விஞ்ஞான ரீதியாய் ஆராயுமிடத்து பரம்பொருளும் உலகமும் ஒன்றாகவே இருக்கிறது. இதிலிருந்து அறிய வேண்டுவதென்ன? சர்வ வல்லமையுள்ள எங்கும் நிறைந்த உருவமற்ற பகவனை ஆதி பரம்பொருளே உருவமாகவும், உருவத்தில் ஒளிரும் ஜீவனாகவும், தோற்றல் மாத்திரத்தில் இருக்கிறதென்பது தெளியக் கிடக்கிறது. அனாதி சக்தியான ஆதிபகவனின் அமானுஷ்ய தத்துவம் இவ்வாறிருக்க மனிதனுடைய நிஜ சொரூபந்தான் என்ன என்று சுய ஆராய்ச்சி செய்து அந்தர் முகத்தே அனுபவ ரீதியாய் உணருகிற பொழுது மனிதனுடைய நிஜம் சொரூபம் பரம்பொருளான பகவத் சொரூபமாகவே இருக்கிறது.

இப்படி மனிதன் பரம்பொருளான பகவத் சொரூபமாயிருக்க அதை சுயமாக ஆராய்ந்து அனுபவத்தில் உணர்ந்து தெளியாது உடலையே நானென்று, ஜீவனையே நானென்று அனுபவிக்கப்படும் புற வஸ்துக்களை எனதென்று கற்பித்துக் கொண்டு அறியாமை மேலோங்க அமைதியில்லாது சுக துக்கங்களென்ற இரட்டை வியாதி

களினுல் மாறிமாறி தாக்கப்பட்டு பிறவிப் பிணியில் உழன்று கிடைத்தற்கரிய மனித ஜென்மத்தை புனித ஜென்மமாக்கிக் கொள்ள வகையறியாது உழலுகின்முன்.

பூத பௌதீக உலக தோற்றமனைத்தையும் உருவமற்ற தனது வியாபகத்திலிருந்து வேற்றுருவம் போன்று தோற்றல் மாத்திரத்தில் சிருஷ்டித்துக் கொண்டுள்ள ஆதி பகவனின் அருள் சொரூபமே தனது வாஸ்த்தவ சொரூபமென்று சுய அராய்ச்சியினுல் தெரிந்து சுயானுபவத்தில் தெளிந்து உலகினனுக இல்லாது உலகினனைப் போல் வாழுகின்ற ஜீவன் முக்தனெவனே அவனே மெஞ்ஞானியெனப் படுவான். பரம்பொருளான இறைவனுக்கு ஞானமென்றொரு பெயர் உண்டு. இறைவனே நான், நானே இறைவன் என்று தெளிந்தவர்களுக்கு ஞானி என்று பெயர்.

தெய்வமாக விளங்குகிறவர்கள் யார்?

ஆதிபகவனுன இறைவன் சொரூபமே தனது சொரூபமென்று தெளிந்த ஞானிகள்தான் உலகினருக்கு தெய்வமாக விளங்குகிருர்கள். ஏனெனில் உலகினருக்கு நேர்முகமாக கடவுளின் உண்மை நிலை விளங்கப்படுவதில்லை. நேர்முகமாக கடவுளின் உண்மை நிலையை சுயானுபவத்தில் விளங்காத பெரும்பாலான உலகமக்கள் கடவுள் சொரூபமே தனது சொரூபமென்று கண்ட ஞான சொரூபிகளின் உருவத்தையே கடவுளாக கொண்டாடி, வணங்கி, வருகிருர்கள்.

அன்றிருந்து இன்றுவரை.

மக்களுக்குத் தெய்வங்களாக விளங்கும், மக்களால் தெய்வங்களாக கொண்டாடப்பெறும் சிவன், விஷ்ணு, இராமன், கிருஷ்ணன், முருகன் போன்ற உத்தம உருவங்

களைத் தாங்கியவர்களெல்லாம் சர்வ வல்லமையுள்ள பரம்பொருளான பகவத் சொரூபமே தனது வாஸ்த்தவ சொரூபமென்று தெளிந்த சாட்சாத் ஞான சொரூபிகளாகும்.

சிவன், விஷ்ணு, இராமன், கிருஷ்ணன், முருகன் போன்ற சாட்சாத் ஞான (கடவுள்) சொரூபிகளின் உருவத்தையே பரம்பரையாக மக்கள் கடவுளாகக் கருதி பக்தி செய்யும் பழக்கமுடையவர்களாக ஆகிவிட்டார்கள். சிவன், விஷ்ணு, இராமன், கிருஷ்ணன், முருகன் ஆகிய ஞான சொரூபிகளின் உருவங்களை மக்கள் கடவுளாகக் கருதித் தொழுகின்ருர்களென்பதற்காக சிவன், விஷ்ணு, இராமன், கிருஷ்ணன், முருகன் ஆகிய எவரும் தங்களுருவத்தையே கடவுளென்று அருளிச் செய்யவில்லை. உடலில் ஒளிரும் எங்கும் நிறைந்த உருவமற்ற சக்திமயமான இறைவன் சொரூபத்தையேதான் தங்கள் நிஜ சொரூபமென்று அருளிச் செய்திருக்கின்ருர்கள், எனவே சிவன், விஷ்ணு, இராமன், கிருஷ்ணன், முருகன் ஆகிய ஞான சொரூபிகளின் உருவங்களில் ஒளிரும் பொதுத் தெய்வமான எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல இரண்டற்ற இறைவனை ஆராய்ச்சிப் பூர்வமாக உணர்ந்து அதே இறைவன் தன்னிடத்தில் ஒளிர்வதையும் உணர்ந்து பார்க்கக்கூடிய எல்லாவற்றிலும் விளங்குவதையும் உணர்ந்து பரம்பொருளான இறைவனுக்கு அன்னியமாக எதுவும் இல்லையென்பதையும் உணர்ந்து எல்லாம் இறைவன் சொரூபமே, நாமும் இறைவன் சொரூபமே என்பதை பயமின்றி சந்தேகமற உள்ளுர அனுபவத்தில் தெளிந்து பந்தமற்று ஜீவன் முக்தனுவதே மனிதன் பிறந்ததின் லட்சியமாகும்.

சிவன், விஷ்ணு, இராமன், கிருஷ்ணன், முருகன் ஆகிய இறைவன் சொரூபமான ஞான சொரூபிகளின் நினைவுச் சின்னங்களான உருவங்களை வழிபட வேண்டாமென்ருே, பக்தி செய்ய வேண்டாமென்ருே கூறவில்லை. எல்லோரும் எப்பொழுதும் சித்த சுத்தி சித்திக்கும் வரை. அவசியம் பக்தி செய்யவும், வழிபடவும் வேண்டியதே. வழிபட்டுத்தான் மனிதன் வழிக்கு வரவேண்டும்.

17

கண்ணபிரான்கூட கீதையில்.

பண ஆசையாலும், கஷ்டம் வரும்போது கஷ்டத்திலிருந்து விடுபடுவதற்காகவும், என்னை உருவமாக தியானித்து வழிபடுகின்றவன் எனது உண்மை தெரியாத ஏழை பக்தனாகும். ஆனால் உலக முழுவதிலும் உருவமற்ற எனது சச்சிதானந்த சொரூபத்தை கண்கள் பார்வை கடந்து காணுகின்றவன் எனக்கு பக்தனல்ல. அவனே நான், நானே அவன் என்று அருளுகின்றார்.

எனவே அன்பர்களே! சிவன் என்று தொழும் திருமேனியை எந்த சக்தி சிருஷ்டித்து இயக்கிக் கொண்டிருந்ததோ, அந்த் சர்வ வல்லமையுள்ள சக்திக்குத்தான் பகவன் என்று பொருள். பக்தர்கள் விஷ்ணு, இராமன், கிருஷ்ணன், முருகன் என்றெல்லாம் தொழும் திரு மேனிகள் சிருஷ்டியாவதற்கு எந்த சக்தி ஆதாரமாக இருந்தது, அந்த திருமேனிகளை எந்த சக்தி இயக்கிக்கொண்டிருந்ததோ இப்பொழுது இங்கு சூழ்ந்திருக்கும் எல்லோரையும் எந்த சக்தி இயக்கிக கொண்டிருக்கிறதோ அந்த சக்திக்குத்தான் ஆதிபகவன் என்றுபொருள் உருவாதீதமான ஆதிபகவனின் இத்தகைய மேலான லட்சியத்தை நிரூபித்துத்தான் வள்ளுவப் பெருந்தகை "ஆதி பகவன் முதற்றே உலகு" என்று அருளினார்.

இத்தகைய எல்லாம் வல்ல பகவனான ஆதி பரம் பொருளை மனிதனாகப் பிறந்தவன் ஆழ்ந்து ஆராய்ந்து உணர்ந்து மனிதப் பிறவியின் லட்சியத்தில் பூர்த்தியடைந்து சரீரமிருக்கும் போதே முக்த புருஷனாக ஆகவேண்டும். முக்த புருஷனாக ஆகவேண்டு மென்றால், முக்த சொரூப மென்பதை உணரவேண்டுமென்றால், மனிதன் எவ்வழியைப் பின்பற்றுவது? எவ்வழியைப் பின்பற்றினால் இந்த சரீரம் இருக்கும் பொழுதே மனிதன் முக்த புருஷனாக முடியும்; என்பதை மனிதர்கள் தெளிவாக தெரிந்து உய்ய வேண்டு

மென்ற லட்சியத்தின் அடிப்படையில் வள்ளுவப் பெருந் தகையானவர் உலகினர்களே! நான் முதற்குறளில் கூறிய பகவனை பரம்பொருளின் அந்தரார்த்த அருள் நிலையை நீங்கள் தெரிந்து தெளிந்து பிறவிப் பிணியற்று இடும்பை யற்று மனக்கவலையற்று ஆனந்த சொரூபிகளாய் வாழ்க்கை யில் திளைக்க வேண்டுமானல் கற்றதினல் பயனில்லை. பகவனை பரம்பொருளின் அமானுஷ்ய நிலையை ஆராய்ச்சி அனுபவப் பூர்வமாக உணர்ந்து பரம்பொருளான பகவத் சொரூபமே தனது வாஸ்தவ சொரூபமென்பதை தெளிந்த தூய அறிவு சொரூபனை ஞானியைக் கண்டுபிடித்து அவனை அண்டித் தொழுது அவன் வாயிலாக முதற்குறளில் கூறி யுள்ள பகவனை ஆதி பரம்பொருளின் அந்தரார்த்த உண்மையை நாளா வட்டத்தில் உபதேசக் கிரமமாக ஆர்வத் தோடு கேட்டு சிந்திக்கும் வழியை பின்பற்றினல்தான் சிந்தித்துத் தெளிந்தால்தான், பகவனை பரம்பொருளின் அந்தரார்த்த நிலையை உணர்ந்து உய்ய முடியுமென்ற கருத்தை நிரூபித்தே அறத்துப்பால் இரண்டாவது குறளில்

“கற்றதினல் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றள் தொழார் எனின்” என்று அருளுகின்றார்.

கற்றதினல் பயன் இல்லை என்று வள்ளுவப் பெருந்தகை எதற்காகக் கூறுகின்றரென்றல் சாஸ்திரங்களை ஒருவன் கற்கின்றன். கற்கும்போது இடையே ஒரு ஏட்டில் சந்தேகம் ஏற்பட்டால் உடனே அந்த ஏடு அவனுக்கு ஏற்பட்ட சந்தேகத்தை நிவர்த்தி செய்து விடுவ தில்லை. ஏட்டில் ஏற்பட்ட சந்தேகத்தை யாரையாவது கேட் டுத்தான் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஆகையால் கற்றும் பயனில்லை. ஒருவன் உண்மையாகவே கற்றதினல் பிறவிப் பயன் அடையவேண்டுமானல் அவன் பேறறிவு சொரூபமான பகவத் சொரூபமே தனது வாஸ்தவ சொரூப மென்று அனுபவத்தில் உணர்ந்து தெளிந்த (தூய அறிவு சொரூபன்) அதாவது திட ஞானியினுடைய திருமேனி யினது பாதத்தைத் தொழுது அவன் வாயிலாய் முதற் குறளில் கூறிய ஆதிபகவனை அறிவு சொரூபனுடைய

உண்மையை அனுபவத்தில் தெரிந்து தெளிய வேண்டும். இதனுல்தான் " **திட ஞானி தெரிசனமே சிவத்தைக் காணல்** " என்று முன்னேர்கள் அறிவுறுத்தியிருக்கின்றனர்.

ஆத்ம ஞான நூற்களான பிர்ம சூத்திரம், பஞ்ச தசி, விசாரசாகரம், பகவத்கீதை, உபநிஷ தாதிகள் முதல் ருக், யஜுர், சாம, அதர்வண மென்ற நான்கு வேதங் களையும், வேதங்களுக்கு உப வேதங்களான ஆயுர்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம். காந்தர்வவேதங்களையும், மற்றும் பல சமய சாஸ்திர ஆகம, இதிகாச புராணங் களையும் கங்குகரையின்றி வாசித்து ஆசார அனுஷ்டானங் களில் மேம்பாடைந்து, உலக மக்களுக்கு ஞானத்தைப் பற்றி, சமயத்தைபற்றி, பிர்மிக்கும் வகையில் சரமாரியாகப் பிரசங்கம் பல செய்யவும், உபதேசங்கள் செய்யவும் செய்யலாம். படித்தவனென்றும், ஞானியென்றும், சந்நியாசி என்றும் வெளி வேஷ விளம்பரம் செய்து பாமர மக்களை ஏமாற்றி பணம் பறிக்கவும் செய்யலாம். அதைக்கொண்டு மடங்கட்டி சுகமாகவும் இருக்கலாம். காசி சென்று சமஸ்கிருதம், உருது போன்ற பல பாஷை களை பயின்று வட மொழியிலுள்ளதை தமிழ் மொழியிலும், தமிழ் மொழியிலுள்ளதை ஹிந்தி மொழியிலும், ஹிந்தி மொழியிலுள்ளதை ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கும் பெரிய மொழி பெயர்ப்பாசிரியராகவும் ஆகலாம். பெரிய பெரிய பல்கலைக் கழகங்களில் (University) வேதாந்த உபதேசம் செய்யும் உபந்நியாசகர்களாகவும் (Lecturer in philosophy) ஆகலாம். எல்லோராலும பூஜிக்கப்படும் புறப் புனிதத் தன்மையும் அடையலாம். **இது வேறு விஷயம்.** ஆனல் எல்லாவற்றையும் இயக்குவதும், எல்லாமாக உள்ளதுமான சர்வ வல்லமையுள்ள சாட்சாத் பரம் பொருளே தனது நிஜ சொரூபமென்பதை சாஸ்திராதீத சுய ஆராய்ச்சியின் வாயிலாய் தெரிந்து சுயானுபவத்தில் சங்கையற தனக்குத் தானே தெளிந்து கற்பனைகளெல்லாம் கழன்று ததாகாரப்பதவியில் மனிதன் திளைப்பதுதான் கிடைத்தற்கரிய மனித ஜென்மத்தின் பூர்வ லெட்சியமாகும். ஆனல் மனிதன் இந்நிலையை அடைவதற்கில்லாது எங்

'கெங்கோ சுற்றி தான் சாஸ்திர ஆகம இதிகாச புராணங்களில் கற்ற விஷயங்களைக் கொண்டு ஏதேதோ பிதற்றி படிப்புத் தடிப்பேறி தன்னிடத்தில் ஏமார்ந்து போகின்றான். இதனால்தான் "சாஸ்திர ஞானியின் தெரிசனமே சிவத்தைக் காணல் என்று முன்னோர்கள் சொல்லவில்லை". "திட ஞானியின் தெரிசனமே சிவத்தைக் காணல்" என்று கூறியுள்ளார்கள்.

திட ஞானியை எப்படித் தெரிந்துகொள்ளுவது?

திட ஞானியின் வாக்கிலிருந்து வரும் ஒவ்வொரு மொழியும் நூற்கள் உபமானங்களையே பிரதானமாகக் கொண்டதாக இராது. திடஞானியின் வாக்கிலிருந்து வரும் ஒவ்வொரு மொழியும் எவராலும் எதிர்க்க முடியாததும் அசைக்க முடியாததுமான அனுபவ மிகுந்த பொன் மொழியாகவே இருக்கும்.

ஞானமடைவது எது?

சரீரம் ஞானமடைவதில்லை. சரீரத்திற்கு ஞானமென்றும் பெயரில்லை. மனிதனிடத்திலிருக்கும் புத்தியானது சுய ஞானமில்லாமல் அறியாமையில் கிடந்து உழலுகிறது. அறியாமையில் கிடந்து உழலும் புத்தியானது அனுபவத்தோடு கூடிய தெளிந்த ஞானத்தை (பேறறிவை) அடைந்தவுடன் அறியாமையற்றதாய் ஆகிவிடுகின்றது. எனவே புத்திதான் ஞானம் அடைகிறது. சரீரம் ஞானமடைவதில்லை. இந்த உண்மையைத் தெரியாத பெரும்பாலான உலக மக்கள் தாடி, காவிஉடை, ஜடாமுடி போன்ற மேல் தோற்றங்களைக் கண்டு, வெளி விளம்பரங்களைக் கண்டு, சரீரத்தையே ஞானியென்றும், சுவாமிகளென்றும், சந்நியாசியென்றும் எண்ணி ஏமார்ந்து

போகிறார்கள். மேலும் ஞானிகள், சுவாமிகள் என்பவர் களெல்லாம் இல்லறத்தை விட்டு காஷாயம் தரித்தும், தாடி சடை வளர்த்தும் சந்நியாசிகளாக இருப்பார்களென்று எண்ணி நாம் ஞானமடைந்தால் நம்மையும் ஞானம் இப்படித்தான் சந்நியாசியாய் போகும்படி செய்துவிடும் என்று ஞானத்தைக் கண்டு பயப்படும் பயந்தாங்கொள்ளி களாகவும் ஆகிவிட்டார்கள்.

ஞானியாக ஒருவன் இருந்தால், ஞானியாக ஒருவன் ஆகிவிட்டால் அவனுக்கென்ன நான்கு கைகள் இருக்குமா? அல்லது நான்கு கால்கள்தான் உண்டாகி விடுமா? மற்ற மனிதர்களுக்கில்லாத மாற்றங்கள் ஞானியின் சரீர உறுப்புக்களில் ஏற்பட்டு விடுமா? அல்லது ஞானமடைந்தவுடன் ஞானியின் சரீரம் பொன் மேனியாகி விடுமா, என்ன? அவனுக்கு சரீரத்தில் எந்தவிதமான உருவ மாற்றங்களும் ஏற்பட்டு விடுவதில்லை சிவ சரீரத்தி லிருந்து புழு ஈறாக உள்ள எல்லா உருவங்களும் பஞ்ச பூதங்களாலான ஒரே அம்சம்தான். எனவே திடஞானியின் சரீரம் பொதுவாக மனிதன் சரீரத்தைப் போலவே மனித சரீரமாகவேதான் இருக்கும். இப்படி மாற்றமில்லா மனித உருவமாகவுள்ள திடஞானிகளை உருவங்களைப் பார்ப்பதற் காக மாத்திரம் உள்ள முகக் கண்களினால் கண்டுபிடிப்ப தென்பது முடியாத காரியம்.

திடஞானியை எதைக்கொண்டு தரிசிப்பது?

முகத்திலுள்ள கண்கள் எதைக்கொண்டு வெளியி லுள்ள உருவங்களைப் பார்க்கின்றது? புத்தியைக் கொண்டே பார்க்கின்றது. இப்படி கண்கள் பார்வைக்கு ஆதாரமாகவுள்ள புத்தியை எந்த கொள்கைகளிலும், எந்த மதக் கோட்பாடுகளிலும். பற்ற விடாது புத்தியை அதன் சுய ஸ்தானத்தில் வைத்து புத்தி தெளிவடைய வேண்டும் என்ற முழு முயற்சியோடு தேடி அலைகின்றவனுக்குத்

தான், தேடிக் கொண்டிருக்கும் திவ்விய மனிதனுக்குத் தான் சிவமான திடஞானியின் (வாலறிவனின்) தெரிசனம் கிடைக்கப்பெறும்.

எந்த சிக்கல்களிலும் அகப்படாமல், புத்தி தெளிவடைய வேண்டும், நாம் பிறவிப்பயனை அடையவேண்டும் என்ற உள்நோக்கான கருத்தின்றி சமயக் கோட்பாடுகளிலும் சாஸ்திர ஞானம் கற்றவர்களிடமும் சார்ந்த பொது புத்தியில்லாதவன் திடஞானியின் பக்கத்தில் இருந்தாலும் அவனுக்கு திடஞானியென்பது தெரியாது, சமயக் கோட்பாடுகளில் சிக்குண்டு சாஸ்திர ஞானம் கற்றவன் சமயாதீத சாஸ்திராதீதமான திடஞானியை (வாலறிவனை) சிரேஷ்ட புருஷனாக உணருவதில்லை. இதனால் தான் வள்ளுவப் பெருந்தகை அறத்துப்பால் மூன்றாவது குறளில் திடஞானியை சிவமாக உணர வேண்டுமென்பதற்காக சிவமான திடஞானியின் சிரேஷ்ட சிறப்பை தெளிவுபடுத்தி சிவமான திடஞானிகளை அண்டித் தொழுதவர் நிலமிசை நீடு வாழ்வர் என்பதை நிரூபித்தே

" மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார் "

—என்று அருளுகின்றார்.

சரீர ஸ்தூல சூட்சமக் கருவிகள் முதல் அந்தக் கரணங்கள் வரை செயலடைவதற்கு பிரதான இரண்டாங் கருவியான சரீரத்துற்ற இருதய கமலம் இயங்குவதற்கு இருதய கமலத்தே (ஏகி = ஒன்றாகி) ஏகினான் = ஒன்றாகினான். அதாவது இருதய கமலத்தில் சாட்சி மாத்திரமாய், இலங்கி இருதய கமலத்தை இயக்குவிக்கும் சுயம் சக்தி சொரூபமே தனது வாஸ்தவ சொரூபமென்று ஆராய்ந்து சுயானுபவத்தே தெளிந்த ஜீவ பாவனை கழன்ற சிவமான சாட்சாத் திடஞானியினுடைய திருவடிகளை சேர்ந்தவர்கள் (திடஞானியை அண்டி ஆதிபகவனின் அருள் நிலையை தெளிந்தவர்கள்) நீடு வாழ்வார் = நித்திய வாழ்க்கை வாழ்வார் என்று அருளுகின்றார்.

கற்றறிந்தோரில் கோடியில் ஒருவனே சுயானுபவ சீலனான திடஞானியாக இருப்பான். சிவமே தானென்று கண்ட திடஞானிக்கு பொதுவாக எதிலும் விருப்பும், வெறுப்பும் இராது. அவன் உதாசீனனாக அதாவது விருப்பு வெறுப்புக்களுக்கு அதீதனாக தனது சொரூபானுபூவத்திலிருந்து பார்வைக்கு உலகினனைப் போன்று தோன்றுவான். உலகினனைப் போன்று வாழ்க்கை நடத்தும் இல்லற வாசியாகவும் இருப்பான். சந்நியாசியாகவும் இருப்பான். திடஞானியின் இத்தகைய லட்சியத்தை நிரூபித்தே வள்ளுவப் பெருந்தகை,

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில"

அதாவது விருப்பு, வெறுப்பற்று பார்வைக்கு உலகினனைப் போன்று வாழ்கின்ற ஆனந்த மயனான திடஞானியினுடைய அடிகளை (பாதங்களை) நெருங்கி அவனது ஆத்மீக வழியைச் சார்ந்தவர்களுக்கு இந்த ஜென்மத்திலும் இனி வரக்கூடிய ஜென்மத்திலும் அறியாமையினாலெழும் துன்பம் சார்வதில்லை என்று அருளுகின்றார்.

இறைவனென்றால் யார்? ஜீவனென்றால் யார்? என்ற ஜீவ ஈஸ்வர லட்சண லட்சியங்களை குருவாயிலாகத் தெரிந்து பிறகு தனக்குத்தானே உள்முகத்தில் சுய ஆராய்ச்சி செய்து, எப்படி ஒரே மனிதன் மகனையும் பேரனையும் குறித்து தகப்பனும், பாட்டனும் ஆகின்றானோ அப்படியே சர்வ வல்லமையுள்ள எங்கும் நிறைந்த உருவமற்ற ஆதிபகவனான பரம்பொருளே ஜீவர்களாகவும், ஜகத்தாகவும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறதென்ற உண்மையை அனுபவப் பூர்வமாகத் தெளிந்து இறைவனுடைய (பொருள்சேர்) நிலைத்த அத்யாத்ம தத்துவங்களை விளக்கம் செய்கின்ற திடஞானிகளிடம் அறியாமைக்கு வித்தான நல்வினை, தீவினை ஆகிய இருவினையும் சேராது என்ற உண்மையை நிரூபித்தே வள்ளுவப் பெருந்தகை,

24

“இருள்சேர் இருவினையும் சேரா—இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு”

—என்று அருளுகின்றார்.

விளக்கம்.

இறைவனை கவிகளால், பாசுரங்களால், பாடல்களால் புகழ்ந்து ராக தாளங்களோடு சுந்தராம்பாளைப் போன்று, சுப்புலட்சுமியைப் போன்று, அரியக்குடி ராமாநுஜ அய்யங்காரைப் போன்று, சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையைப் போன்று, தண்டபாணி தேசிகரைப் போன்று, தியாகராஜ பாகவதரைப் போன்று, மதுரை மணியைப் போன்று, பித்துக்குளி முருகதாசைப் போன்று கேட்பவர் தலையசைத்து ரசிக்கும் தன்மையில் பாடினாலோ அல்லது கிருபானந்த வாரியாரைப் போன்று, குன்றக்குடி அடிகளாரைப் போன்று, நாகர்கோவில் ஆறுமுகம் பிள்ளையைப் போன்று பிரசங்கவாயிலாய் இறைவனைப்பற்றி, இறைவன் புகழைப்பற்றி சமயப்பிரசாரம் புரிந்தாலோ அல்லது பக்தி பரவசமுண்டாகி மனம் குவிந்து ஆனந்தக் கண்ணீர் ததும்ப இறைவனைப் புகழ்ந்து ஆடினாலோ, இறைவனைப் புகழ்ந்து பஜனை பாடினாலோ மனிதனை இருவினை சாராது இருந்து விடுமென்று அர்த்தமில்லை. இருவினை என்பது அவ்வளவு எளிதானதுமல்ல இறைவனைக் கவிகளாலும், பாசுரங்களாலும், கீர்த்தனைகளாலும் பாடுவதால் பஜனை செய்வதால் இறைவனைப்பற்றி புகழ்ந்து பேசுவதால் இருவினை சாராதென்பது வாஸ்தவமானால் இறைவனைப்பற்றிப் புகழ்ந்து பாடுகிறவர்களில், பஜனை செய்கிறவர்களில் இறைவனைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறவர்களில் பெரும்பாலோர் தீவினை சேகரம் செய்யும் விளம்பர பக்தர்களாய், வேஷ பக்தர்களாய், மனிதனை மனிதன் ஏமாற்றும் மாக்களாய், நய வஞ்சகர்களாய், பல குடிகளை கெடுக்கும் பணப் பேய்களாய், ஏழைகளின் உழைப்பை உறிஞ்சும் இரக்கமற்றவர்களாய், பகவான் புகழைக் கூறிப் பணம் பறிக்கும் பகட்டர்களாய், பக்தரைப்போல் காட்சியளித்துக்கொண்டு உள்ளூர பஞ்சமாபாதகங்கள் புரியும் பாமரர்களாய் இருக்கிறார்கள்.

இறைவனைப் புகழ்ந்து பாடுகிற எல்லோருமே, இறைவனைப் புகழ்ந்து பேசுகிற எல்லோருமே அனாதியான இறைவனின் அமானுஷ்ய அரூப நிலையை உணர்ந்து, பக்தியில் ஈடுபட்டு இருவினைசாரா இயல்பினையுடையவர்களாக இருக்கிறார்களா என்றால் அப்படி அனுபவத்தில் இல்லை. இறைவனின் உண்மை விளங்காமல் இறைவனைப்பற்றிப் புகழ்ந்து பாடுகிறவர்களில் பெரும்பாலோர் இறைவனைப் பற்றித் தாங்கள் பாடும் பாசுரங்களுக்கான, கவிகளுக்கான, பொருள் என்ன என்பதுகூடத் தெரியாது வெறும் இசைத்தட்டுப் போல் பாடுகிறார்கள். இறைவனைப்பற்றிப் பாடினீர்களே இந்த பாட்டின் பொருள் என்ன என்பதைப் பற்றிப் கொஞ்சம் விளக்கம் செய்யுங்களென்றால் பொருள் விளங்காமல் விழிக்கிறார்கள்.

பாசுரங்களுக்கு, பாடல்களுக்கு, பொருள் விளங்கி, இறைவனைப்பற்றி பாடுகிறவர்களும்கூட இறைவன் பெருமையைப்பற்றி இறைவனின் நித்திய நிலையைப் பற்றி பிரசங்கம் செய்கிறவர்கள்கூட அனுபவப்பூர்வமாக இறைவனின் அமானுஷ்ய அரூப லட்சிய நிலையை கூறுவதில்லை. இறைவனைப்பற்றிக் கூறும் பாசுரங்களுக்கும், பாடல்களுக்கும், இறைவனைப்பற்றிப் பேசும் பேச்சிற்கும் இலக்கண ரீதியாய் பொருள் சொன்னீர்களே, இலக்கண ரீதியாய் நீங்கள் கூறும் பொருளின் லட்சியத்தை அனுபவப் பூர்வமாக விடை பகருங்களென்றால் விடை பகர இயலாது சாஸ்திர சமய நூற்களின் மேற்கோளை எடுத்துக் காட்டி இதுதான் பதில் என்று சொல்லுகிறார்கள். மீண்டும் அவர்களை நோக்கி அன்பரே இறைவனைப்பற்றி சாஸ்திரங்களில் சமய நூற்களில் கூறியிருப்பதை நீங்கள் கூறுங்கள் என்று உங்களைக் கேட்கவில்லை. இறைவனைப்பற்றிப் பாசுரங்களில், பாடல்களில் உள்ள பொருள் சொல்லுகின்றீர்களே அப்படி சொல்லுகின்ற நீங்கள் இறைவனின் அமானுஷ்ய நிலையை பூத பௌதீகம் கடந்து சுயமாக ஆராய்ந்து அனுபவப்பூர்வமாக உணர்ந்து தெளிந்திருக்கின்றீர்களா? அப்படித் தெளிந்த திவ்யநிலை பெற்றிருந்தால் சாஸ்திர கோட்பாடுகளின்றி, சமயக் கோட்பாடுகளின்றி, இறை

வனைப்பற்றிய அனுபவ உண்மையைக் கூறுங்களென்றுக் கேட்டால் பதில் சொல்ல அனுபவமில்லாது கேட்டவரைக் கெட்டவரென்று வெறுக்கிறார்கள். மேலும் இறைவனைப் புகழ்ந்து பாடி, இறைவனைப் புகழ்ந்து பேசி பக்தி செய்கின்ற பக்தர்களிலிருந்து சாதாரணமாக கடவுளை வழிபடும் பக்தர்கள்வரையிலுமுள்ள பெரும்பாலான பக்தர்கள் இறைவனை எப்படி வழிபடுவது, எதற்காக வழிபடுவது என்ற விபரம் எதுவும் புரியாதவர்களாய் பொருள் வேண்டும், பூமி வேண்டும், பூஷணம் வேண்டும், நீண்ட ஆயுள் வேண்டும், மனைவி மக்களோடு பசியாற உண்டு களித்து உறங்க வேண்டும், எல்லோராலும் ஆடம்பரமாக மதிக்கப்படுவதற்கான மதிப்பு வேண்டும், பிணியற்று வாழ வேண்டும், கோர்ட்டு விவகாரம் என்பக்கம் தீர்ப்பாக வேண்டும், வியாபாரம் வலுக்க வேண்டும், தொடர்ந்த காரியம் நிறைவேறவேண்டும் என்றெல்லாம் இறைவனிடம் பிச்சை கேட்கும் பிச்சைக்கார பக்தர்களாகவே இருக்கிறார்கள். இப்படி பிச்சை கேட்கும் புத்தியோடு இறைவனைப் புகழ்ந்து பாடி இறைவனைப் புகழ்ந்து பேசி பக்தி செய்தால் இருவினை சாராது இருந்துவிடுமா ?

புறச்சாதனங்களுக்காக இறைவனை வேண்டிப் பல வழிகளில் பக்தி செய்கின்றோமே. இறைவனென்ன நம்மை எதுவும் செய்ய இயலாத குழவிக் கல்லைப்போன்று சிருஷ்டித்துள்ளாரா ? இல்லையே, வாழ்க்கைக்குத் தேவையான புறச்சாதனங்களை அடைவதற்கும், அனுபவிப்பதற்கும் சரீரத்தில் விஞ்ஞானிகளுக்கும் எட்டாத விஞ்ஞான ரீதியாய் கை, கால், செவி, வாய், நாக்கு, மூக்குபோன்ற அருமையான அபூர்வமான கருவிகளை அமைத்து சிருஷ்டித்திருக்கிறாரே. இப்படியிருக்க வாழ்க்கைப் புறச்சாதனங்களுக்காக இறைவனைப்புகழ்ந்து பாடி இறைவனைப்புகழ்ந்து பேசி பக்தி செய்வது வெட்கக்கேடல்லவா ? புத்தியீனமல்லவா ! சம்பாதிப்பதற்கும், சாப்பிடுவதற்கும், வாழ்க்கைக்கு தேவையான புறச்சாதனங்களை அனுபவிப்பதற்கும் அத்தியாவஸ்யமான நல்ல கருவி கரணாதிகள் அமைந்த அழகான சரீரத்தை இறைவன் கொடுத்திருக்க

இதை அறியாமல் அற்பத்தனமாக புறச்சாதனங்களை நோக்கி இறைவனை வேண்டிப் பாடி புகழ்ந்து பக்தி செய்வதால் இறைவன் நமக்கு இருவினை சாராத இயல்பை அளிப்பானு? இறைவனை வழிபடும் நமது நோக்கத்திற்கும், இருவினைசாராத நிலைக்கும் ஏதாவது சம்மந்தமுண்டா என்று சிந்திப்பதில்லை. மேலும் இருவினை சேர்வதற்கு எது வித்தாக இருக்கிறதென்று மனிதன் உணர்வதுமில்லை.

இருவினைக்குக் காரணம் எது?

மமதை, கோபம், பொறாமை, வஞ்சகம், லோபம் போன்ற தீய குணங்கள் தீவினைக்குக் காரணமாக இருக்கின்றன. அன்பு, கருணை, பொறுமைபோன்ற, தூய குணங்கள் நல்வினைக்குக் காரணமாக இருக்கின்றன. இந்நிலையில் மனித சமூகத்தில் பெரும்பாலும் மமதை, கோபம், வஞ்சகம், பொறாமை, சூட்சிபோன்ற தீய குணங்களே தாண்டவமாடுகின்றன. இப்படி இருக்க, இறைவனைப் பாடிப் புகழ்ந்து பேசி பக்தி செய்கின்றபோது வாழ்க்கைப் புறச்சாதனங்களைவேண்டி இறைவனிடம் பிச்சை கேட்டால் இருவினை சாராதிருந்து விடுமா?

தீவினை அகலுவதற்காகவாவது க்ஷேத்திர யாத்திரை செய்கின்றார்களா?

பழனி, திருத்தணி, எட்டுக்குடி, திருப்பதி, கலியபெருமாள்கோவில், வைத்தீஸ்வரன்கோயில், தஞ்சை மாரியம்மன்கோவில், சமயபுரம், காசி, ராமேஸ்வரம்போன்ற க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து வருகின்றவர்களை நோக்கி க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து வருகின்றீர்களே, என்ன விசேஷம் என்று கேட்டால் ஒரு பிரார்த்தனை, அதை நிறைவேற்றுவதற்காக குடும்பத்தோடு போய் வருகிறோம் என்று சிலர் சொல்லுகிறார்கள். என்ன பிரார்த்தனை என்று கேட்டால் எனக்கு பித்தவாத சுரம் அடித்து இறந்து விடுவேன் போலிருந்தது. பிழைத்துக்கொள்ள வேண்டு

மென்று பிரார்த்தனை செய்துகொண்டேன். அதற்காக கோவில் சென்று உண்டியலில் பணம் போட்டு பிரார்த்தனையை முடித்துக்கொண்டு வருகிறோம் என்று சொல்லுகிறார்கள்.

சிலர் மூக்கில் பருவுண்டாகி கஷ்டப்படுத்திவிட்டது. அது சௌகரியமடைய வேண்டுமென்று, சௌகரியமடைந்தால் மூக்கைப்போல் வெள்ளியில் செய்து கொண்டு வந்து சந்நிதியில் செலுத்துகிறேன் என்று பிரார்த்தனை செய்துகொண்டேன். அதன்படி பிரார்த்தனையை நிறைவேற்றிவிட்டு வருகிறேனென்று கூறுகிறார்கள்.

சிலர் குழந்தை இல்லை. குழந்தை பிறந்தால் குழந்தையைப்போன்று உருவம் செய்து தொட்டிலுடன் சந்நிதியில் கொண்டுவந்து வைக்கிறேனென்று பிரார்த்தனை செய்து கொண்டேன். குழந்தை பிறந்தது. அதன்படி பிரார்த்தனையை நிறைவேற்றிவிட்டு வருகிறேன் என்று சொல்லுகிறார்கள். சிலர் முடக்குவாதம் வந்துவிட்டது. நிவர்த்தியானால் மொட்டையடித்து முடிசெலுத்தி காவடி எடுக்கிறேனென்று பிரார்த்தனை செய்து கொண்டேன். அதற்காக சாமிக்கு முடி செலுத்தி காவடி எடுத்துவிட்டு வருகிறேன் என்று சொல்லுகிறார்கள்.

க்ஷேத்திர யாத்திரை செய்து வருகின்ற இன்னும் சிலரை நோக்கி என்ன விசேஷம் க்ஷேத்திர யாத்திரை செய்துகொண்டு வருகின்றீர்களே என்று கேட்டால் விசேஷ மொன்றுமில்லை. சும்மா கோவில் குளங்களை சுற்றிப்பார்த்து சுவாமி தெரிசனம் செய்துவிட்டு வருகிறோம் என்று கூறுகிறார்கள்.

இப்படி இறைவழிபாடு செய்ய ஆலயங்களுக்குச் செல்லுபவர்கள் வைத்தியர் மலிந்த இந்த காலத்தில் வைத்திய உதவிக்காக உத்தியோகத்திற்காக, பொருளுக்காக, பூஷணங்களுக்காக, மற்ற புறச்சாதனங்களுக்காக கடவுளை வழிபடும் கருத்தற்றவர்களாக இருக்கிறார்கள். சிலர் கண்காட்சி

சாலைகளைப் பார்ப்பதுபோல் க்ஷேத்திரங்களை சுற்றிப்பார்த்து வருகிறார்கள். சிலர் மாலை நேரத்தில் பூங்காவிற்கு (Park) உலாவச் செல்லுவதுபோல் உள்ளூர் ஆலயங்களுக்குச் சென்று உலாவி வருகிறார்கள். இவ்வளவு இழிவான நிலையில், இறை வழிபாடு ஆலய வழிபாடு சீரழிந்து விட்டது.

க்ஷேத்திர யாத்திரை செய்தோ, உள்ளூர் ஆலயம் சென்றோ மக்கள் சுவாமி தெரிசனம் செய்துவர வேண்டுமென்று முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ள ஆழ்ந்த கருத்தை புரிந்து கொள்ளாததினால் இன்று பெரிய க்ஷேத்திரங்களிலோ சாதாரண ஆலயங்களிலோ புனிதமான பக்தியின் பெயரைச் சொல்லி மக்கள் நடந்துகொள்ளும் அறியாச் செயலைப் பார்க்கும்போது வருந்தவேண்டி யிருக்கிறது. மேலும் ஆலயங்களில் விழாக்களின் பெயரால் நடைபெறும் அலங்கோல ஆர்ப்பாட்டங்களையும், ஆலயங்களை ஒரு கருவியாக வைத்துக்கொண்டு பாமர மக்களிடம் பணம் பறிக்கும் வித்தைகளையும் பார்க்கும்போது பணம் சம்பாதிப்பதற்கான வேடிக்கை ஸ்தலங்களில் ஆலயங்களும் ஒன்றாகி விட்டதே என்று ஆயாசப்பட வேண்டியிருக்கிறது.

இதனால்தான் தாடி மீசை நரைத்த திராவிடக் கழக ராமசாமியார் என்ற குழந்தையும், அதைச்சார்ந்த குஞ்சுகளும், தாடி மீசை முளைத்த திராவிட முன்னேற்றக் கழக அண்ணாவென்ற சிறுவரும் அவரது குழாங்களும், ஆலய வழிபாட்டையும், பொதுவாக கடவுள் வழிபாட்டையும் கருத்தற்றதென்றும், கற்பனையென்றும், மூடக் கொள்கையென்றும் முற்றும் உணர்ந்தவர்கள் போல் முரசு கொட்டுகிறார்கள்.

ராமசாமியாரென்ன! அண்ணாத்துரையென்ன! அணுகுண்டு (Atom Bomb), ஜலவாயுக்குண்டு (Hydrogen Bomb) போன்ற நாசகாலக் கருவிகளைக்கண்டுபிடித்த பெரிய பெரிய விஞ்ஞானிகளிலிருந்து, பொதுவாக ஆஸ்தீகர்களென்று தன்னை நினைத்துக்கொண்டிருக்கும் பெரிய பெரிய

படிப்பாளிகள்முதல் பெரிய பெரிய பதவியிலுள்ளவர்கள் வரை பெரும்பாலோர் கடவுள் விஷயத்தில் குழந்தைகளாகவே இருக்கிறார்கள்.

நாஸ்தீகர்களான ராமசாமியாரும், அண்ணாத்துரையாரும் கூறுவதற்கு ஒத்தாற்போல், பொதுவாக பக்தர்கள் பக்தியென்றால் என்ன? எப்படி பக்தி செய்வது? எதற்காக பக்தி செய்வது? யார் பக்தி செய்வது? எது வரை பக்தி செய்வது? என்பனபோன்ற எந்த விபரமும் தெரியாது பக்தி பண்ணிக்கொண்டிருந்தால் முக்தி பெறலாமென்று கண் மூடித்தனமாக நினைத்துக்கொண்டு எப்படி பக்தி பண்ணினால் முக்தி பெறலாமென்ற விபரம் புரியாது முக்தி என்றால் அதன் பொருள் என்ன என்பதும் தெரியாது பக்தியின் பெயரால் அறியாமையான விளையாட்டுகள் விளையாடுகிறார்கள்.

எனவே கவிகளால், பாசுரங்களால், கீர்த்தனங்களால், வாய்மொழிகளால், இறைவனைப் புகழ்ந்து பக்தி செய்கிறவர்கள் ஆலய வழிபாடு, க்ஷேத்திர யாத்திரை செய்து இறைவனை பக்தி செய்கிறவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்? அப்பரைப் போன்று, சுந்தரரைப்போன்று, மாணிக்கவாசகரைப்போன்று, ஞானசம்மந்தரைப்போன்று, இராமலிங்க சுவாமிகளைப்போன்று, தியாகய்யர்வாளைப்போன்று, ஆழ்வாராதிகளைப்போன்று, தூய உள்ளம் கொண்டவர்களாய், இறைவன் மகிமையை, இறைவன் உண்மையை புகழ்ந்து பாடி, புகழ்ந்து பேசி அனுபவ பக்தியில் ஆழ்ந்தவர்களாயிருக்கவேண்டும். இத்தகைய அனுபவ பக்திதான் இறைவனை அடையும் இலட்சிய பக்தியாகும்.

இதை விடுத்து இறைவன் தத்துவத்தைப்பற்றி, இறைவன் புகழைப்பற்றி, விசேஷித்து எழுதப்பட்ட கவிகளை, பாசுரங்களை, கீர்த்தனங்களை, பாராயணம் செய்து வைத்துக்கொண்டு பக்த வாத்தியங்களோடு இறைவனைப் பற்றி கேட்பவர் ரசிக்க இனிமையான குரலோசையில் ராக

கியானம் ததும்ப பாடுவதும், வாய்ச்சாதுரியமாய் கேட்பவர் ஆச்சரியப்படும்படி இடை இடையே பெரியோர்கள் இறைவனைப்பற்றிப் பாடிய செய்யுள்களை கூறி இறைவனைப் பற்றி பிரசிங்கிப்பதும், சாதாரணமாகப் பேசுவதும், பேசுவதை க்ஷணிக புத்தியோடு கேட்பதும் பக்தியாகாது. இவைகளெல்லாம் பக்தியின் பெயரால் க்ஷணிக மன சாந்திக்காக செய்யும் புரியாத வழிகளேயாகும்.

ஆலயம் தொழுவதின் அர்த்தமென்ன?

மனிதனிடமிருக்கும் மமதை, பொறுமை, பணத் திமிர், ஏழைக்குறும்பு, வஞ்சகம், கோள், கோபம், லோபம் போன்ற தீய குணங்களை நிவர்த்தித்துக் கொள்வதற்காக, நிவர்த்தியாக வேண்டுமென்பதற்காக, மனிதன் புனிதனாக வேண்டுமென்பதற்காக, சித்த சுத்தியடைவதற்காக அடிக்கடி ஆலயங்களுக்குச் சென்று பயபக்தி சிரத்தையோடு வணங்கி சுவாமி தெரிசனம் செய்து மனம் புத்தியாதிகளை நல்லவழியில் பழக்குவதற்காக, மனிதன் அனுபவ பக்தியில் தழைப்பதற்காக தீர்க்க தரிசிகள் ஆரம்ப மார்க்கமாகவுள்ள ஆலயங்களை அதாவது காசி, ராமேஸ்வரம், திருப்பதி, சிதம்பரம், பழனி, திருத்தணி, திருவண்ணமலை, திருச்செந்தூர், எட்டுக்குடி, திருவாரூர் போன்ற க்ஷேத்திரங்களை நிர்மாணித்துப்போனார்கள். இக்கருத்தைக்கொண்டு தான் தமிழ்த்தாய் ஔவை பிராட்டியார்கூட **“ஆலயம் தொழுவது சாலவும் நன்று”** எனவும், **“கோவில் இல்லா ஊரில் குடி இருக்கவேண்டாம்”** எனவும் கூறிச்சென்றுள்.

ஆலய வழிபாட்டின் இத்தகைய தத்துவத்தை தெரிந்து ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்கின்ற பக்தர்கள் உளங்கனிந்து இறைவனே! கோபம் என்ற தீயகுணம் என்னைப்பற்றி சன்மார்க்கமில்லாதவனாக ஆக்கிவிட்டது. கோபம் என்ற கொடிய குணம் என்னை விட்டு நீங்க வேண்டுமென்று இறைவனிடம் மன்றாடியாராவது வேண்டுகின்றார்களா? உள்ளூர் ஆலயங்களுக்குச்

செல்லுகின்றவர்கள் இறைவன் சன்னிதானத்தின்முன்னுல் நின்று இறைவனே! என்னிடமிருக்கும் பொருமை, வஞ்சகம், மமதை, பிரஸ்திரீகளை நோக்கும் காமப்பார்வை போன்ற தீய குணங்களெல்லாம் என்னைவிட்டு அகல வேண்டும், நான் தூயகுணங்கள் நிறைந்த புனிதனுகவும், அனுபவபக்தி பொருந்திய விரதனுகவும் திகழ வேண்டு மென்று மன்ருடி, கண்ணீர் மல்கி, கசிந்துருகி யாராவது வேண்டுகின்ருர்களா? இப்படி தன்னிடமிருக்கும் தீய குணங்கள் நீங்கி தூயகுணங்கள் ஓங்க வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றவர்கள் நூற்றில் பத்து பேர் களாவது இருந்தால் இன்றைய மனித சமூகம் நீதி நெறி களில் எவ்வளவு முன்னேற்றமடைந்திருக்கும்?

பக்தனைப்போன்ற பாவனை.

மனிதனிடம் மமதை, பொருமை, வஞ்சகம், கோபம்போன்ற தீய குணங்கள் மலிந்திருந்தாலும் ஆலயங் களில் இறைவழிபாடு செய்யும்போது மனிதன் ஒழுக்கமே உருவான உயர்ந்த பிறவியைப்போன்று தூய குணமுள்ள வனைப்போன்று தோன்றுகின்ருன். மேலும் மனிதன் இறைவழிபாடு செய்யும்போது பக்தியில் அப்படியே கரைந்தவனைப்போன்று காட்சியளிக்கின்ருன். இதனுல் பயனென்ன? புறச்சாதனப் பயனைக் கருதி, பக்தரைப் போல் வேஷம் போட்டுக்கொண்டு இறைவழிபாடு செய்து இறைவனைப் புகழ்ந்தால் இருவினை சாராதிருந்துவிடுமா?

இறைவழிபாடு செய்தால் இருவினையும் தீருமா?

வெட்கத்தைவிட்டு, வெளி வேஷத்தைவிட்டு இறைவனே! என்னிடம் மமதை, பொருமை, வஞ்சகம், கோபம்போன்ற தீய குணங்கள் இருந்துகொண்டு மனித ஜென்மம் எடுத்ததற்குரிய பயன் அடையவிடாது நல்லவர் களை நேசிக்கவிடாது உண்பதுவும் உறங்குவதுமாகவுள்ள

மிருக வாழ்க்கையில் என்னை வீழ்த்தி நாசமாக்குகின்றது. இந்த தீய குணங்கள் அனைத்தும் என்னை விட்டு அகல வேண்டும் என்று உள்ளுர மனம் கசிந்து கண்ணீர் வடித்து இறைவனை மன்றாடி தவறாது ஆலயங்களுக்குச் சென்றோ அல்லது இருக்குமிடத்தில் இருந்தோ பயபக்தியோடு இறை வழிபாடு செய்கின்ற லட்சிய புருஷனுக்குத்தான் இருவினை களில் ஒரு வினையான தீவினை தொலையும். ஆனால் வள்ளுவப் பெருந்தகை கூறியபடி மனிதன் இருவினை சேராத இயல்பை அடையவேண்டுமானால் அதற்கு வேறு மார்க்கம் உள்ளது.

இருவினை சேராத இயல்பை எப்படி அடைவது?

மனிதன் இருவினை சேராத இயல்பை அடைய வேண்டுமானால் ஆடல், பாடல், பக்திப் பரவசம், பிரார்த் தனை, நிஷ்டை, ஜபம், யோகம், க்ஷேத்திர யாத்திரைபோன்ற சித்த சுத்திக்கான எல்லா சாதனங்களையும் விட்டு, சித்த சுத்தியுடன் இறைவனின் எதார்த்த அகண்ட அரூப சக்தி மாத்திரமான அமானுஷ்ய நிலையை தெரிய வேண்டுமென்ற, தெரிந்து தெளிய வேண்டுமென்ற தீவிர அவாவுடன் (சாஸ் திர ஞானிகளிடம், போலி ஞானிகளிடம் சிக்காது) சிவமான திட ஞானியைத் தேடி அலைந்து கண்டுபிடித்து அவனை குருவாக ஏற்று அவனை இறைவனாகக்கொண்டு அவனிடம் இறைவனின் சொரூப உண்மைத் தத்துவத்தை நாளா வட்டத்தில் உபதேசவாயிலாய் அதாவது கேள்விவாயிலாய் கேட்டு தெரிந்து பிறகு கேட்டதை சுயமாகச் சிந்தனை செய்து சிந்தனை முடிவில் இறைவன் சொரூபமே தனது சொரூபமாக இருக்கிறதென்பதை அனுபவப் பூர்வமாகத் தெளிந்து, தெளிவு வேறு, தெளிந்தவன் வேறு என்ற நிலை கடந்து சாட்சாத் காரணாகி இறைவன் என்பதற்குரிய எதார்த்தப் பொருளை இறைவன் உண்மை விளங்காத உலக மக்களுக்கு புகழோடு விளக்கமாக சுயானுபவ ரீதியாக ஓதுகின்ற நிலை சித்திக்கும்போதுதான் இருவினையும் சேராத இயல்பினனாக ஆக முடியும். எனவே பேரன்பர்களே!

"இருள்சேர் இருவினையும் சேரா—இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

வள்ளுவப் பெருந்தகை அருளுகின்ற இந்தக் குறளின் லட்சியார்த்த உண்மையை பின்பற்றி இறைவனின் எதார்த்த சொரூபமே தனது சொரூபமென்பதை உணர்ந்து இறைவனும் தானும் ஏகமே என்ற ஸ்திரமிகும் நிலையை தெற்றெனை விளங்கி இருவினை சேராத இயல்பினை அடைவீர்களாக!

கண், நாக்கு, மூக்கு, செவி போன்ற ஐம்புலன்கள் வாயிலாய் அனுபவிக்கப்படும் புறச்சுகங்களை மனிதன் சாசுவதமான சுகமென்று நம்பி அதன்வழி சென்று சுக துக்க சுழற்சியினுல் அமிழ்த்தப்பட்டு, சாசுவதமான சுகத்தை அனுபவிக்க முடியாது ஏமார்ந்து போகின்றுன். இந்நிலையில் ஐம்புலன்கள் வாயிலாய், மனம் புத்தியாதிகளால் அனுபவிக்கப்படும் விஷய சுகங்கள் விளங்குவதற்கு விளக்கம் கொடுத்துக்கொண்டு விஷயாதீதமாக, சாட்சி மாத்திரமாக, ஒளிரும் சாட்சாத் பரம் பொருளே தனது நிஜ சொரூப மென்று தெளிந்து புலன்கள் வாயிலாய் விஷய சுகங்களை பற்றும் எண்ணங்களை அதன் வழிவிடாது விடக்கட்ட அனுபவத்தில் தெளிந்த இறைவன் சொரூபமான, மெய்யொழுக்க சீலனை விருப்பு வெறுப்பற்று உலக வாழ்க்கை புரியும் திட ஞானியின் வழி நின்ருர் நீடு வாழ்வார் அதாவது உலக வாழ்க்கையில் நித்திய வாழ்க்கை வாழ்வார் என்பதை நிரூபித்தே வள்ளுவப் பெருந்தகை,

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கம்
நெறிநின்ருர் நீடு வாழ்வார்"

—என்று அருளுகின்ருர்.

தனக்குவமை இல்லாது தானே சகலத்திற்கும் உவமையாகவுள்ள ஆதிபகவனை பரம்பொருளே தனது

யதார்த்த சொரூபமென்று தெளிந்த சிவமான சாட்சாத் ஞான சொரூபியின் பாதார விந்தத்தை அண்டி அவனது ஆத்மீக வழியை அனுபவ ரீதியாய் பின்பற்றினவர்களைத் தவிற மற்றவர்கள் மனக்கவலையை மாற்றிக்கொள்ளுவது அதாவது மனக் கவலையற்றிருப்பது அரிதான காரியம் என்பதை நிரூபித்தே வள்ளுவப் பெருந்தகை,

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

—என்று அருளுகின்றார்.

அற ஆழி அதாவது பொறுமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் போன்ற தீய குணங்களற்று ஆழியைப் போன்று விசாலமான தூய நிலையுடையதான அந்தணன், அந்தணன் என்பவன் யார்? அந்தமான தெளிவானதும், தீர்க்கமானதுமான வஸ்துவை சுய ஆராய்ச்சி, சுயானுபவ வாயிலாய் உணர்ந்து அதுவானவன் விரிவாகசொல்லுமிடத்து சொச்சமற்று எல்லா ஜீவர்களிலும் இலங்கும் எல்லாமாக உள்ள எங்கும் நிறைந்த ஆதி பகவனை மூலப்பொருளை உணர்ந்து தெரிந்து அதுவே தனது நிஜ சொரூபமென்று அனுபவத்தில் தெளிந்த திட ஞானி யெவனோ அவனே அந்த அணன் — அந்தணன் எனப்படுவான். இத்தகைய திட ஞானியான அந்தணன் தான் பிறவி என்றால் என்ன? எதற்காகப் பிறவி ஏற்படுகிறது. எது பிறவி எடுக்கிறது? பிறந்து வளர்ந்து இருந்து இறுதியில் இறந்து போகும்படியாக ஆகிவிடுகிறதே. இறக்காமல் இருக்க முடியுமா? இறவாமை என்பது என்ன? இறந்த பிறகு எப்படிப் பிறவி ஏற்படுகிறது? பிறவி எடுக்காமலிருப்பதற்கு வழி என்ன என்பனபோன்ற அறியாமை சிக்கல்களை எல்லாம் அறுத்து **பிற ஆழி** அதாவது பிறவிப் பெருங் கடலாகிய கர்ப்பாசயத்தில் ஜென்மம் தோறும் மூழ்கி மூழ்கி நீந்த வகையறியாது உழன்று கொண்டிருக்கும் மனிதனை பிறவிப் பெருங்கட

லாகிய கர்ப்பாசயத்திலிருந்து தப்புவித்து பிறவா நிலை எய்து வதற்கு அனுக்கிரகம் செய்ய முடியும் என்பதை நிரூபித்தே வள்ளுவப் பெருந்தகை,

"அறஆழி அத்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால்
பிற ஆழி நீந்தலரிது" —என்று அருளுகின்றார்.

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

இதன் லட்சியார்த்த மென்ன? எண்குணத் தான் என்பதற்கு மதித்தற்குரிய இயல்பினுகை தோற்ற மளிப்பவன் என்று பொருளாகும். மதித்தற்குரிய தோற்ற மளிப்பவன் யார்? எங்கும் நிறைந்த பரம் பொருளான ஆதிபகவனே யாகும். கண்ணபிரான்கூட கீதையில் பகவத் சொரூபமாக எங்கும் நிறைந்த என்னை எவனெவன் எந்தெந்த விதமாக தரிசிக்கின்றுனே அவனவனுக்கு அந்தந்த விதமாகக் காட்சி யளிக்கிறேனென்று அருளுகின்றார். உதாரணமாக, முச்சந்தியான இடத்தில் ஒரு மரத்தூண் நடப்பட்டிருக்கிறது. இருள் சூழ்ந்த நள்ளிரவில் திருட வருகிறவன் தன்னை யாரும் பிடித்துக் கொள்வார்களோ வென்ற இயல்பினுய் பயந்து பயந்து ஒண்டி ஒளிந்து முச்சந்தி பக்கம் வரும்போது முச்சந்தியில் நடப்பட்டி ருக்கும் மரத்தூண் யாரோ ஒருவர் தன்னை பிடிப்பதற்காக பதுங்கி நின்று கொண்டிருப்பது போன்று தோற்றமளிக் கிறது. மேலும் இருள் சூழ்ந்த அதே நள்ளிரவில் திருடனைப் பிடிக்க வேண்டுமென்ற ஒரே இயல்பினுகை வந்து கொண்டிருக்கும் ஒரு போலீஸ்காரன் மரத்தூண் நடப்பட்டிருக்கும் முச்சந்தி பக்கம் வரும்போது யாரோ ஒரு திருடன் தன்னைக் கண்டு ஒளிவது போன்று போலீஸ்காரனுக்கு அந்த மரத்தூண் தோற்றமளிக்கிறது. மேலும் ஒரு பெண்ணை நேசித்தவன் அந்த பெண்ணோடு தனித்து பேசும்போது நான் இரவு 12-மணி சுமாருக்கு முச்சந்திக்கு வந்து விடுகிறேன். நீ அதற்கு முன் வந்து

எனக்காகக் காத்துக்கொண்டிரு. நான் அங்கு வந்து உன்னை சந்திக்கின்றேன் என்று கூறி வந்த ஒருவன் இருள் சூழ்ந்த அதே நள்ளிரவில் அவள் முச்சந்தியில் வந்து நிற்பா ளென்ற பதிந்த எண்ண இயல்பினனாக முச்சந்தி வரும் போது வருவதாக சொன்ன அவள் அவனைக் கண்டு நாணு வதுபோல் அவனுக்கு அந்த மரத்தூண் தோற்றமளிக்கிறது. மரத்தூண் என்ற உண்மை விளங்காத, மரத்தூண் என்று நிதானித்து நோக்காத எவனெவன் ஒரே மரத்தூணை எந்தெந்த இயல்பினையோடு மதிக்கின்றானோ அந்த இயல் பினைக்குத் தக்கவாறு எப்படி தோற்றமளிக்கின்றதோ அப்படியே சக்திமயமான உருவ மற்ற எங்கும் நிறைந்த ஆதிபகவனான பரம்பொருள் அதன் உண்மை விளங்காத எவரெவர் எந்தெந்த இயல்பினையோடு மதிக்கின்றார்களோ அவரவர்களுக்கு மதித்தற்குரிய அந்தந்த இயல்பினைக்குத் தக்கவாறு அந்தந்த அளவில் வைஷ்ணவ மதஸ்தர்களுக்கு நாராயணனாகவும், சிவ மதஸ்தர்களுக்கு சிவனாகவும், மகம் மதிய மதஸ்தர்களுக்கு அல்லாவாகவும், கிறிஸ்தவ மதத் தினருக்கு பரமண்டலத்திலிருக்கும் பிதாவாகவும், சாக்தர் களுக்கு சக்தியா (பெண் தெய்வமா)கவும், கணதர்களுக்கு கணேசனாகவும், காட்டேறி, பிடாரி, அய்யனார், மாரி, சாமுண்டி, சங்கிலிகருப்பன், சடாமுனி போன்ற எண் ணற்ற குட்டி தெய்வங்களாகவும், பேய், பிசாசுகளாகவும், அவரவர் **கற்பிக்கும்** தன்மைக்குத் தக்கவாறு தோற்ற மளிக்கின்றது.

எங்கும் நிறைந்த பரம்பொருளே! அதன் உண்மை விளங்காதவர்களுக்கு அவரவர் மதித்தற்குத் தக்க அளவில் இவ்வளவு பேதத் தோற்றங்களாகத் தோன்றுகிற தென்றால், எங்கும் நிறைந்த பரம்பொருளே தனது நிஜ சொரூபமென்று தெளிந்த அனுபவம் வெளியாகும் சரீர முடைய திட ஞானிகளும் அப்படியேதான். எவனெவன் எந்தெந்த இயல்பினையோடு மதிக்கின்றானோ அவனவனுக்கு அந்தந்த இயல்பினனாக காணப்படுவான். எனவே திட ஞானிக்கும் மதித்தற்குரிய இயல்பினனாகத் தோற்ற

மளிப்பவன் அதாவது எண்குணத்தான் என்ருெரு பெய ருண்டு. ஆகையால் மனிதன் எந்தெந்த இயல்பினையோடு மதிக்கின்ருனே அந்தந்த இயல்பிணக்கு தக்க அளவில் திட ஞானி தோன்றுவான். எனவே திடஞானியை உருவத்தை மாத்திரம் பார்ப்பதற்கான கண்கள் பார்வையைக்கொண்டு அறியாமையால் மதித்து ஏமார்ந்துவிடாதே. திடமான சிவ ஞானியை சரீர பார்வை கடந்து இறைவனென்று உணர்ந்து அவனது பாதார விந்தங்களைத் தலையால் வணங்க வேண்டும் என்பதை எச்சரிக்கை செய்யும் லட்சியத்தை நிரூபித்தே எண் குணத்தானை (திட ஞானியை) க்கண்டு திரிகரண சுத்தியோடு தலை வணங்காதவனுடைய சரீர உறுப்புக்கள் உணர்ச்சியற்ற வெறும் ஜட உறுப்புக்கள் போன்று பயனற்றவையே என்பதாக,

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" —என்று அருளுகின்ருர்.

இறைவனென்ருல் தலைவனென்று பொருள். தலைவனென்ருல் தனக்கு மேல் எதுவும் தலைமையில்லாது தானே சர்வத்திற்கும் தலைமை பொருளாக எந்த பொருள் உள்ளதோ அந்த சர்வ வல்லமையுள்ள மூலப் பொருளான இறைவன் சொரூபமே தனது நிஜ சொரூபமென்று சங்கை யறத் தெரிந்து அனுபவத்தில் தெளிந்த சிவமான திட ஞானி யின் திருவடிகளை அண்டி அடைக்கலம் புகாதவர்கள் பிறவிப் பெருங்கடலாகிய கர்ப்பாசயத்தில் அமிழ்ந்து நீந்த வகையறியாது ஜென்மந் தோறும் உழன்று கொண்டே இருப்பார்கள்.

இறைவன் சொரூபமான திடஞானிகளை அண்டி னவர்கள் பிறவிப் பெருங் கடலாகிய கர்ப்பாசயத்தைக் கடந்து பிறவா நிலை பெறுவார்கள். அதாவது நாம் இறப்பு பிறப்பற்ற இரண்டற்ற இறைவனென்பதை தெரிந்து, தெளிந்து ஜீவன் முக்த நிலையில் திளைப்பார்கள். இந்த லட்சி யத்தை நிரூபித்தே வள்ளுவப் பெருந்தகை,

" பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார் "—என்று அருளுகின்றார். பரம் பொருளுக்குப் பாதம் உண்டா ?

அடியென்றும், தாள் என்றும், வள்ளுவர் அருளு வதினால் கடவுளை வள்ளுவர் உருவமாக எண்ணியே தான் சொல்லியிருக்க வேண்டுமென்று ஹேஷ்யமாக முடிவு செய்துகொண்டு கடவுள் வாழ்த்திற்கு உரை செய்த உரை யாசிரியர்களெல்லாம் கடவுளை உருவமாகவே கருதி உரை எழுதியுள்ளார்கள். உரை எழுதிக்கொண்டும் வருகிறார்கள்.

உரையாசிரியர்கள் கருதும் கருத்துப்படி வள்ளுவர் கடவுளுக்கு உருவம் கூறி, தாளென்றும், அடிக ளென்றும் எழுதப்பட்டிருப்பது வாஸ்தவமானால், முதற் குறளில் "**அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி பகவன் முதற்றே உலகு**" என்று உலகிற்கு முதற் பொருளாக கடவுளைக் கூறக் காரணமில்லை. உரையாசிரியர்கள் கருத் துப்படி கடவுள் உருவமாக இருந்தால் உலகத்தை சிருஷ் டிக்கும்போது கடவுள் உருவமாக இருந்திருக்கவேண்டும். உலகத்தை சிருஷ்டிக்கும்போது கடவுள் உருவமாக இருந் திருக்குமேயானால் இந்த காலத்திலும், எந்த காலத்திலும் கடவுள் உருவமாகவே இருக்கவேண்டும். ஒரு காலத்தில் உருவமாக இருந்து ஒரு காலத்தில் கடவுள் உருவமில்லாமல் போவதென்பது சாதாரண மனித இயல்பே யாகும். கடவுள் உருவமாக இருந்தால், கடவுளைத் தேடி பக்தர்கள் அலைய வேண்டுமென்ற கஷ்டமில்லை. சுலபமாக எல்லோ ருமே பார்க்கலாம்.

கடவுள் உருவமாக இல்லை. கடவுள் அருவமாக இருந்து பக்தர்களுக்கு காட்சி கொடுப்பதற்காகவும் பக்தர் களை சோதிப்பதற்காகவும், பக்தர்களை ரட்சிப்பதற்காகவும், துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்காகவும் கடவுள் உருவமாக வந்தாரென்று, வருவாரென்று சமய

வாதிகள் கருதுவதுபோல் கடவுள் உருவமாக வருவது, உருவமாக வந்தது வாஸ்தவமானல் அநாகரீகமும், மிருகச் செயலும், யுத்த வெறியும் தாண்டவமாடும் அநீதி நிறைந்த இந்த காலத்தில் வேதாந்தத்தின் பெயரைச் சொல்லி, பக்தியின் பெயரைச் சொல்லி, வாக்கு சாதுர்யத்தினுல், விளம்பரத்தினுல் பாமர மக்களேயும், படித்த பாமர மக்களேயும் ஏமாற்றி பணம் பறித்து ஞானிகளேப் போல், யோகிகளேப் போல், பக்தர்களேப் போல், நிஷ்டர்களேப் போல், தோற்ற மளித்துக்கொண்டு உழைப்பின்றி வாழும் ஆசாரக் கள்ளர்களான சோம்பேறிகள் மலிந்த இந்தக் காலத்தில் கடவுள் அரசாங்க உதவியின்றி அநீதிகளே ஒழித்து துஷ்டர்களே சம் ஹரித்து நீதி நிலேக்க தர்மம் தழைக்க, நல்லோர் கிளேக்க, மனித சமூகம் புனித சமூகமாக வழி செய்யவேண்டும். வழி செய்திருக்கவும் வேண்டும். இப்படி அனுபவத்தில் இல்லே.

வெறும் உருவமாக மாத்திரம் கடவுள் இல்லே. வெறும் ஜட உருவமாக மாத்திரம் கடவுள் இருந்தால், சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் முதலிய நிகழ்ச்சிகள் நிகழ்த்த முடியாது. எனவே கடவுளின் சுய நிலே உருவத்தில் ஒளிரும் உருவமற்ற சக்தி சொரூபமாக இருக்கிறது.

மாறுபாடான எண்ணற்ற உருவங்களில் பரம்பொருள் பிரகாசித்துக் கொண்டிருந்தாலும், மனித உருவான சரீரத்தில்தான் பரம்பொருள் தனது சுய ஒளியை துலக்கமாக வெளிப்படுத்துகிறது. உதாரணமாக கண்ணுடியும் கடுதாசியும் சூரிய ஒளியில் வைத்தால், சூரிய ஒளி கண்ணுடியிலும் கடுதாசியிலும் படுகிறது. கண்ணுடியிலும், கடுதாசியிலும் சூரிய ஒளி பட்டாலும், சூரிய ஒளி கடுதாசியில் பிரதிபலிப்பதில்லே. கண்ணுடியில் தான் பிரதிபலிக்கிறது. இதேபோல் சர்வ வல்லமையுள்ள சக்தி சொரூபமான பரம்பொருள் எல்லாமாகி, எல்லா உருவங்களிலும் வியாபித்திருந்தாலும் எல்லா உருவங்களிலும் பிரதிபலிப்பதில்லே. ஆனல் மனித உருவத்தில் மாத்திரம் துலக்கமாக

பிரதி பலிக்கிறது.

எல்லாமாக உள்ள உருவமற்ற சக்தி சொரூப மான பரம்பொருள் மனித உருவத்தில் துலக்கமாக பிரதி பலிப்பதால்தான் மனிதனானவன் அவன் உடலையும் அவன் மனம், புத்தி, சித்தம், அகங்காராதிகள் புரியும் செயலையும் அவன் அனுபவிக்கும் விஷய சுகங்களையும் அவன் இருக்கும் இருப்பிடத்தையும் உணருகிறான். ஆனால் மனிதனைப்போல் மற்ற ஜீவராசிகள் தன்னையும், அதாவது தன் உருவம் இன்னது என்பதையும், தான் அனுபவிக்கும் விஷய சுகங் களையும் தான் இருக்கும் இருப்பிடம் இன்ன இடம் என்ப தையும் உணர முடிவதில்லை. உணருவதற்கான கருவிகளும் அவைகளுக்கு அமைக்கப்படவில்லை. இதனால் தான் மனிதன் எல்லா ஜீவராசிகளையும் அடக்கி ஆளுகிறான். மனிதரல்லாத மற்ற ஜீவர்களெதுவும் மனிதனை அடக்கி ஆளுவதில்லை. அடக்கி ஆளவும் முடிவதில்லை. எனவே பரம்பொருளானது தான் துலக்கமாக விளங்குவதற்காகவே அதற்கான கருவிகளை அமைத்து எல்லா ஜீவர்களுக்கும் மேலான மனித ஜென்மத்தை தோற்றுவித்துள்ளது இப்படி தோற்றுவித்த மனித சரீரங்களிலெல்லாம் பரம்பொரு ளானது எல்லாவற்றையும் இயக்குவித்து சரீரம், மனம், புத்தியாதிகளினால் அனுபவிக்கப்படும் சுக துக்கங்களில் சம்மந்தப்படாமல் சரீரத்தில் சாட்சிமாத்திரமாய் விளங்கு கிறது.

எல்லாவற்றையும் இயக்குவித்து சாட்சி மாத்திர மாய் பரம்பொருள் விளங்குகிறதென்ற உண்மை விளங்காத வெளி விஷயங்களில் பரவி நிற்கும் மனது வயப்பட்ட மனித புத்தியானது உள்முகத்தே அதன் யதாஸ்தானத்தை நோக்கி ஆராய்ச்சி செய்யும்போது புத்தி தனது வாஸ்த்தவ அறிவு சொரூபத்தை விளங்கிக்கொள்ளுகிறது. இப்படி புத்தி யானது தனது வாஸ்த்தவ சொரூபத்தை விளங்கிக்கொள்ளு கிறபோது, புத்தி அறியாமையற்றதாய், புத்தி எல்லா வற்றையும், அறியும் அறிவு சொரூபமாக ஆகி பிறகு அதீத அனுபவத்தே அறிவு இரவு பகலற்ற சாட்சாத் ஆதிபகவத்

சொரூப நிலையில் திளைத்து திடஞானியென்ற பெயரை அடைகிறது. இப்படி பரம்பொருளான திடஞானம் விளங்கும் சரீரத்தையுடைய பாதத்தைத்தான் வாலறிவன் தாள் என்றும், வேண்டுதல் வேண்டாமை யிலானடி யென்றும், தனக்குவமை இல்லாதான் தாள் என்றும், வள்ளுவப் பெருந்தகை அருளுகின்றார்.

இப்படி இருக்க உருவத்தைக் கடவுளாகக் கொள்ளுவது கூடாது. உருவத்தை இயக்கி உருவத்துள் ஒளிரும் சர்வ வல்லமையுள்ள பரம்பொருளே கடவுளென்பதை உணர்தல் வேண்டும். உருவமற்ற பரம்பொருளாகக் கடவுளிருக்கும்போது அதற்கென்று தனியாக கைகளோ, கால்களோ எப்படி இருக்கமுடியும்?

எங்கும் நிறைந்த அஜாதியான கடவுளின் அமானுஷ்ய அரூப நிலை விளங்காத சாதாரண ஜனங்கள் உருவமாக எண்ணி கடவுளை வழிபடுவதுபோல் வள்ளுவப் பெருந்தகையும் கடவுளை உருவமாக எண்ணி கடவுள் வாழ்த்து அருளி இருக்கின்றாரு? இல்லை! இல்லை!! கடவுளை ஜட வஸ்துவாக (உருவமாக) எண்ணி கடவுள் வாழ்த்துக் கூற வள்ளுவரென்ன கடவுளைப்பற்றி அவ்வளவு அறியாதவரா? அல்லது நாஸ்தீகரா? இல்லை; இல்லை. வள்ளுவப் பெருந்தகை எங்கும் நிறைந்த பரம்பொருளான கடவுளின் அரூப அமானுஷ்ய நிலையை ஆராய்ச்சி அனுபவப் பூர்வமாக உணர்ந்து தெளிந்த சிவமான திட ஞானியே யாகும்.

உருவமற்ற சக்தி சொரூபமான பரம்பொருளே உலகமாகவும், அதிலுற்ற பல்வேறு தோற்றங்களாகவும் உள்ளது என்ற சூட்சும லட்சியத்தை நிரூபித்தே வள்ளுவப் பெருந்தகை,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"—என்று அருளியுள்ளார்.

இத்தகைய அந்தரார்த்த, அதீத, அனுபவ லட்சியம் விளங்கப்பெருமல், குழந்தையென்ற பெயருடைய தாடி மீசை முளைத்த ஒரு நாஸ்திகக் குழந்தை வள்ளுவர் குறளுக்கு எழுத்திலக்கணத்தை அடிப்படையாகக்கொண்டு இலட்சிய இலக்கணத்தை அறியாது குழந்தைத்தனமாக நாஸ்திக கருத்தை புகுத்தி உளறிக் குவித்து உரை செய் திருக்கிறது. மேலும் பரிமேலழகர் முதல் பெரிய பெரிய தமிழ் பண்டிதர்கள்வரை, எங்கும் நிறைந்த உருவமற்ற சக்தி சொரூபமான பரம்பொருளை உருவமாக நினைத்து உரை செய்திருக்கிருர்கள். இதே அளவில் பலர் உரை செய்துகொண்டும் வருகிருர்கள். பரம்பொருளை உருவமாக நினைத்து உரையாசிரியர்கள் முதற்குறளுக்கு உரை செய்த நிலேயே மற்ற ஒன்பது குறள்களுடைய (வள்ளுவரது) லட்சியம் விளங்காமல் ஒன்பது குறள்களுக்கும் பரம் பொருளை உருவ நிலையிலேயே உரை செய்திருக்கிருர்கள். ஆனல் வள்ளுவப் பெருந்தகையோ கடவுள் வாழ்த்திலுள்ள மற்ற ஒன்பது குறள்களிலும் பரம்பொருளை உருவமாகக் கொண்டு அதற்குத் தாள், அடி, (பாதம்) என்று கூறவில்லை. உருவமற்ற பரம்பொருளே தனது நிஜ சொரூபமென்று சுயானுபவத்தில் தெளிந்த ஞானம் மிளிரும் சரீரத்தை யுடைய திட ஞானிகளையே சுட்டிக்காட்டி அவர்களது திருவடிகளையே வாலறிவன் தாள் என்றும், மலர் மிசை ஏகினன் மாணடி என்றும், வேண்டுதல் வேண்டாமை இலானடி என்றும் தனக்குவமை இல்லாதான் தாள் என்றும், அற ஆழி அந்தணன் தாள் என்றும், எண்குணத் தான் தாள் என்றும், இறைவனடி என்றும் அருளுகின்ருர்.

விக்கிரக வழிபாடு கடவுள் உண்மையை விளக்குமா ?

திட ஞானியே
தெய்வ உண்மையை தெளிவு படுத்துவான்.

விக்கிரக வழிபாடு வேண்டாமென்பதற்காக இதைச் சொல்லவில்லை விக்கிரக வழிபாடு அவசியம் வேண்டியதே. ஆனல் மனிதன் விக்கிரக வழிபாடு எது

வரை செய்யவேண்டியதென்பதே இங்கு உணர வேண்டிய விஷயம். விக்கிரக வழிபாடு ஜீவன் முக்த நிலை அடைவதற்கு ஆரம்ப மார்க்கமேயாகும். உதாரணமாக ஆரம்பப் பாடசாலையில் முதல் வகுப்பில் ஒரு மாணவன் படித்தால் ஒரு வருஷம் முதல் வகுப்பு படிப்பை முடித்து முதல் வகுப்பில் தேர்ந்து மறு வருஷம இரண்டாவது வகுப்பில் சேர்ந்து படித்து படிப்படியாக மேல் வகுப்புகளுக்கு செல்வதற்காகத்தான் ஆரம்பப் பாடசாலைகளை அமைத்துள்ளார்கள். இதேபோல் மனிதன் ஜீவனிருக்கும் போதே மேலான முக்த நிலை அடைவதற்கு சித்த சுத்திக்காக, கடவுள் நினைவு சித்தத்தில் நிலைத்திருப்பதற்காக, பயிற்சிக் கூடமாக, ஆரம்ப பாடசாலையாக, ஆலயங்களை தீர்க்கதரிசிகள் அமைத்துப் போனார்கள்.

ஆரம்பப் பாடசாலை முதல் வகுப்பில் படிக்கும் மாணவன் மேல் வகுப்புகளுக்குச் செல்ல புத்தி சக்தி இல்லாது முதல் வகுப்பிலேயே உழன்று கொண்டிருப்பது போல ஞான மாணவர்களான பக்தர்களும் படிப்படியாக மேல்பதமான ஜீவன் முக்த நிலையை அடைய புத்தி சக்தி இல்லாது ஆயுள் முழுவதும் பக்தி (ஆலய வழிபாடு) யென்ற ஆரம்ப பாடசாலையிலேயே உழன்று கொண்டிருக்கிறார்கள்.

கடவுள் நினைவு சித்தத்தில் பதிய ஞாபகச் சின்னங்களாக ஆலயங்களில் விளங்கும் விக்கிரங்களையே கடவுளென்று நினைத்ததினாலேயே மனிதன் கடவுளின் அமானுஷ்ய நிலையை ஆராய்ந்து அனுபவ அளவில் புரிந்து கொள்ள முடியாதவனாய் விக்கிரக வழிபாட்டிலேயே விழுந்து கிடக்கின்றான்.

விக்கிரக வழிபாட்டிலேயே விழுந்து கிடக்கும் மனிதன் ஆலயத்திற்கு செல்லும் போதோ அல்லது ஆலயத்தைக் கடந்து செல்லும் போதோ பாதரட்சை இருந்தால் கழற்றி ஓரமாக வைத்துவிட்டு ஆலயத்திலுள்ள விக்கிரகத்தை தெரிசிப்பதற்காக அங்கவஸ்திரத்தை இடுப்பில்

சுற்றி கரங்களை குவித்து கும்பிட்டு வணங்கி சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கின்றான். காதை கரங்களினால் பிடித்து தோப்புக்கரணம்கூட போடுகின்றான். இப்படி வாழ்நாள் முழுவதும் விக்கிரகத்தை வழிபடுகிற அவனுக்கு கடவுளைப் பற்றிய அந்தரார்த்த அனுபவ உண்மை எதுவும் புலப் படுவதில்லை. வாழ்க்கையில் சூழ்ந்திருக்கும் அறியாமை களும் அகலுவதில்லை. விக்கிரக வழிபாடு செய்கின்ற பெரும்பாலான மனிதர்களில் எங்கோ ஒருவன் புற ஒழுக்க முள்ளவனாக இருக்கின்றான். அதிலும் அபூர்வமாக எங்கோ ஒருவன் அக ஒழுக்கமுள்ளவனாக இருக்கின்றான்.

விக்கிரகத்தைப் பார்த்து, தனக்குத்தானே முணு முணுத்துக்கொண்டு தலை வணங்குகின்ற அவன் கடைத் தேறுவதற்கு வழிகாட்டிகளாக உள்ள அறிவு அனுபவத்தில் மேம்பட்டவர்களையோ, சிவமான திடஞானிகளையோ கண்டு தெரிசிப்பதுமில்லை. தெரிசிக்க முயற்சி எடுத்துக் கொள்ளுவதுமில்லை. ஆனால் காசியில் கடவுள் இருக்கிறார், கன்னியாகுமரியில் கடவுள் இருக்கிறார், ராமேஸ்வரத்தில் கடவுள் இருக்கிறார், திருப்பதியில் கடவுள் இருக்கிறார், திருத்தணியில் கடவுள் இருக்கிறார், திருச்செந்தூரில் கடவுள் இருக்கிறார் என்று பணத்தை செலவழித்துக் கொண்டு சரீர சிரமத்தையும் பாராமல் ஆலயங்கள்தோறும் சென்று சுற்றி அலைந்து ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களை தெரிசித்து விட்டுவருவான். ஊர் வந்து நான் காசியில் கடவுளை தெரிசித்தேன், கன்னியாகுமரியில் கடவுளை தெரி சித்தேன், ராமேஸ்வரத்தில் கடவுளை தெரிசித்தேன், திருப்பதியில் கடவுளை தெரிசித்தேன், திருச்செந்தூரில் கடவுளை தெரிசித்தேன் ஆஹா! என்ன ஆனந்தமான சேவை, சுவாமிக்கு செய்திருந்த அலங்காரத்தைப் பார்க்க பதினாயிரங் கண்கள் இருந்தாலும் போதாது என்றெல்லாம் கூறுவான். ஆனால் மனிதனுக்கு கடவுளைப் பற்றிய உண்மையை (ஞானத்தை) உணர்த்தி மனிதனிடத்திலேயே கடவுளை காண்பிக்கும் திடஞானியான ஒருவன் காசியிலோ, கன்னியாகுமரியிலோ, ராமேஸ்வரத்திலோ, திருப்பதி யிலோ, திருச்செந்தூரிலோ, வேறு இடங்களிலோ அல்லது சமீபத்திலோ இருக்கிறானென்றால் ஆலயங்களில்

கடவுளைக் கும்பிட அலைந்து கொண்டிருக்கும் அவன் நமக்கு விமோசனம் கிட்டிவிட்டது என்று நினைத்து ஓடோடி தீர்க்க தரிசியான திடஞானியிடம் சென்று ஐயனே! கடவுள் உண்மையை எனக்கு விளக்கி மேல்பதமான ஜீவன் முக்த நிலையை அடைய அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று கேட்டு திருந்திக்கொள்வதில்லை. (உண்மை ஞானத்தை அதாவது கடவுள் நிலையை உணர்த்துகின்ற திடஞானியான ஒருவன் சீன தேசத்தில் இருக்கிறானென்றாலும், கடவுளை உணர்ந்து உய்யவேண்டுமென்ற விருப்பமுடையவன் அங்கு ஓடவேண்டுமென்று நபிகள் நாயகம் கூறுகின்றார்.) விக்கிர கத்தையே கடவுள் என்று வழிபடுகிற அவன் அனுபவமான ஆடம்பரமற்ற திடஞானிகளை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் அவனைக் கண்டு வணங்குவதில்லை. அவனைச் சார்வதுமில்லை. அவனென்ன கடவுளா? அவனும் நம்மைப்போன்ற மனிதன்தானே என்று அறியாமையினால் அலட்சியம் செய்து விடுகின்றான். ஆனால் கடவுளைக் கண்டதுபோல் வெளி வேஷமிடும் ஆஷாட பூதிகளான, ஆசாரக் கள்ளர்களான, ஆடம்பரக்காரர்களை கண்டால் மயங்கி நெளிந்து, வளைந்து கைகூப்பி கும்பிடு போடு கின்றான்.

கடவுளின் நினைவுச் சின்னமான விக்கிரத்தைக் கண்டு கடவுளென்று சுற்றி வந்து கும்பிடுகின்றோமே, பேசும் தன்மையற்ற ஜட பொருளான விக்கிரகத்தைவிட கடவுளை ஆராய்ச்சி அனுபவப் பூர்வமாக உணர்ந்து தன்னிடத்தில் கடவுளைக் கண்டு மற்றவர்களுக்கும் கடவுளைக் காண்பிக்கவல்ல தீர்க்கதரிசியான திடஞானி கீழ்த்தரமான வனென்பதை சிந்திப்பதில்லை. பயபக்தியோடு விக்கிர கத்தைக்கண்டு கடவுளென்று பணியும் ஒருவன் விக்கிரகத் தையும் பக்தி செய்துகொண்டு விக்கிரகத்தினிடம் செலுத்தும் அதே பயபக்தியை சுயானுபவியான ஒரு திடஞானி யினிடம் செலுத்தி பயபக்தியோடு அவனை குருவாக ஏற்று அவனிடம் தான் வணங்கும் கடவுளின் அதீத உண்மையை கேட்டானானால் கேட்டதை சிந்தித்துத் தெளிவானானால் அவனை அறியாமல் அவனிடம் குடிகொண்டிருக்கும் அறியா

மைகள் எல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் விலகி, மனித ஜென்மம் சாபல்யமடையும் புனிதப் பயனைப் பெற்று, அமிர்த சொரூபியாக வல்லவோ ஆகிவிடுவான் ?

எனவே,

திடஞானி தெரிசனமே சிவத்தைக் காணல்,
திடஞானி தெரிசனமே தீர்த்தமாடல், —என்று

தெளிந்தோர் கூறிய திவ்விய மொழியைத் தெரிந்து, பயனைக் கருதாது, கடவுள் பக்தியில் கனிந்த உள்ளமுடைய அனுபவ பக்தர்களும், திருக்குறள் சிந்தனையாளர்களும், பொதுவாக திருக்குறளை வாசித்து வருபவர்களும், வாசிக்க விரும்புகிறவர்களும் குறிப்பாக கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் உள்ள பத்துக் குறளை இதுகாறும் உரை செய்யதுபோல் இனி மேலும் உரை செய்துகொண்டே போகாமல், கடவுள் வாழ்த்தின் லட்சியார்த்த விளக்கத்தை சுய விவேகத்தோடு (பொது புத்தியோடு) ஆராய்ச்சி செய்து கடவுள் வாழ்த்தில் கூறியுள்ள வள்ளுவப்பெருமானின் இலக்கணநீத லட்சியக் கருத்தை உணர்ந்து அதன்படி முதற்குறளில் கூறிய கடவுள் தத்துவத்தை தெளிந்து பின்னருள்ள ஒன்பது குறள்களில் கடவுள் சொரூபமே தனது நிஜ சொரூபமென்று கண்ட அனுபவ திடஞானிகளை சுட்டிக்காட்டி விளக்கம் செய்யும் அந்தரார்த்தத்தை புரிந்து, இப்பிறவியிலேயே பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்கு, எக்காலும் இடும்பையற்றிருப்பதற்கு, இருவினைகள் சாராதிருப்பதற்கு மனக்கவலையற்று வாழ்வதற்கு ஆடம்பரமற்ற சிவமான சாட்சாத் திடஞானியைக் கண்டு அவனை குருவாக ஏற்று அவனால் விளக்கம் செய்யும் கடவுளின் அமானுஷ்ய தத்துவத்தை கிரகித்து உள்ளூர தனக்குத்தானே உணர்ந்து தெளிந்து ஜீவன் முக்த ஸ்திரம் ஜீவிகளாய் வாழ்வீர்களாக !

திடஞானியான
குருநாதனிடம் எப்படி ஞான தானம் பெறுவது ?

ஒருவனிடம் பிச்சை கேட்கும்போது பிச்சைக்காரன் வெட்கத்தைவிட்டு, ஆணவத்தைவிட்டு, அங்கத்தை ஒடுக்கி பயபக்தியோடு இரு கரங்களையும் கூப்பி பல்லைக்

காட்டி ஐயா! ஸ்வாமீ! பிச்சைக் கொடுங்கள் என்று எப்படி பிச்சைக் கேட்கின்றனரோ அப்படியே ஜென்ம சாபல்யம் அடைவதற்கான இறைவனின் எதார்த்த நித்திய ஞானத்தை தெரிந்து தெளிந்து உய்ய வேண்டுமென்ற ஒருவன் பணக்காரனாயினும், படித்தவனாயினும், உத்தியோகஸ்தனாயினும், மதிப்பிற்குரியவனாயினும், ஏழையாயினும், அவன் திடஞானியான குருநாதனை அண்டி குருநாதன் குடிசையில் வசிக்கும் ஏழையாயினும், பார்ப்பவர் மதிப்பதற்கான ஆடம்பரமில்லாதவனாயினும் அதைப் பொருட்படுத்தாது குருநாதனை இறைவனாகக்கொண்டு, குருநாதன் வசிக்கும் குடிசையை கோயில்களுக்கெல்லாம் மேலான கோயிலாகக்கொண்டு குருநாதனிடம் ஆணவத்தை விட்டு, வெட்கத்தைவிட்டு அடங்கி, ஒடுங்கி பயபக்தியோடு இரு கரங்களையும் கூப்பி குரு மூர்த்தமான ஐயனே! என் மனித ஜென்மம் அறியாமையற்ற புனித ஜென்மம் ஆவதற்கான வழி காட்டி, அனுக்கிரகம் செய்து என்னை வாழ்விக்க வேண்டுமென்று மன்றாடிக் கெஞ்சிக் கேட்டு உண்மை ஞானத்தைப் பெறும் இணக்க மனப்பான்மையுடையவனாக இருத்தல் வேண்டும். இப்படி சிவமான அனுபவ திட ஞானிகளிடத்தில் அகந்தையை விட்டு, வெட்கத்தைவிட்டு அடி பணிந்து ஞான தானம் பெறும் உத்தமோத்தமன் எவனோ அவனே ஜீவனிருக்கும் போதே முக்தி பெறும் சிரேஷ்ட நிலையை அடைவான்.

வெட்கத்தையும், ஆவணத்தையும், மதிப்பையும் விடாது விளம்பர வேஷ ஆடம்பரமற்ற சுயானுபவிகளான திடஞானிகளை சந்தித்து அவர்களுக்கு ஆவனசெய்து ஞானமடையலாமென்று எண்ணி அவர்கள்பால் பழகி ஞானம் கேட்கும் எவனாயினும் அவன் ஜென்ம சாபல்யத்திற்கான அனுபவம் கைவல்யமாகாது வெறும் வேதாந்தம் பேசும வீணனாகி விடுவான்.

யாசகம் கேட்பவன் அடங்கி, ஒடுங்கி பயபக்தியோடு கரங்களைக் கூப்பி வணங்கி யாசகம் கேட்பதில்

சந்தோஷமடைந்தோ அல்லது ஐயா! ஸ்வாமி! தர்மப் பிரபு என்று புகழ்வதிலோ ரமித்து ஒருவன் பிச்சைக்காரனுக்குப் பிச்சை கொடுப்பதில்லை. பிச்சை கொடுப்பவன் பிச்சை எடுப்பவனைக் கண்டு பச்சாதாபப்பட்டே பிச்சை கொடுக்கிறான் இதுபோலவே மனிதனாகப் பிறந்ததற்குறிய ஜென்ம சாபல்யமடைய வேண்டுமென்ற பேரவாவுற்ற ஒருவன் பணக்காரனாயினும், படித்தவனாயினும், உத்தியோகஸ்தனாயினும், மதிப்பிற்குரியவனாயினும், அவன் வெட்கப்படாமல் மதிப்பைவிட்டு, ஆணவத்தைவிட்டு அடங்கி ஒடுங்கி கரங்களைக் கூப்பி ஜென்ம சாபல்யத்திற்கான தெய்வ உண்மையைக் கேட்பதால் அடங்கி ஒடுங்கி செய்யும் மரியாதையைக் கண்டு மகிழ்ந்தோ, மயங்கியோ திடஞானியானவன் கடவுள் உண்மையை (ஞானத்தை) விளக்குவதில்லை. ஜென்ம சாபல்யமடைய வேண்டுமென்று அவாவுற்ற அவனது உள்ளக் கிடக்கையைக்கண்டு பச்சாதாபப்பட்டே திடஞானியானவன் உண்மையான கடவுள் (பிர்ம) ஞானத்தை விளக்கம் செய்கின்றான். எனவே இறைவனின் யதார்த்த ஞானத்தை உணர்ந்து ஜீவன் முக்த பேரின்ப நிலை பெற்று உய்ய வேண்டுமென்ற பேரவாவுற்ற ஒருவன் குருவிற்காக, குருவை மகிழச் செய்வதற்காக அடங்கி ஒடுங்கி கரங்களை கூப்பி வணக்கம் முதலியன செய்கின்றேமென்று எண்ணுவானானால் அவன் ஒரு மூடனேயாவான்.

குருவிற்காக, குருவை மகிழச் செய்வதற்காக ஒருவன் குருவினிடம் பயபக்தியோடு அடங்கி ஒடுங்கி நடந்துகொள்வதில்லை. நடந்துகொள்ளவும் கூடாது.

பள்ளமுள்ள இடத்தில் தான் தண்ணீர் தங்கும். மேட்டில் தண்ணீர் தங்காது. இதுபோல் ஆணவமற்ற இணக்கமுள்ளவன் உள்ளத்தில் தான் நல்லுபதேசம் தங்கும். மமதை மேடடைந்தவனுடைய உள்ளத்தில் நல்லுபதேசம் தங்காது.

சிஷ்யன் உணரவேண்டியது.

குருநாதனிடம் ஆணவத்தைவிட்டு வெட்கத்தை விட்டு அடங்கி ஒடுங்கி பணிவாக நடந்து கொள்ளுவதெல்லாம் குருநாதனுக்காக அல்ல நாம் ஜென்மம் எடுத்ததற்கான சாபல்யமடைவதற்காக, நாம் கடைத்தேறுவதற்காக, நமது வெட்கத்தை, நமது ஆணவத்தை நாமே அகற்றி இணக்க உள்ளத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக, நம்மை நாம் பழகப்படுத்திக்கொள்வதற்காக, நமக்கு நாமே செய்து கொள்ளும் நல்ல பயிற்சியென்பதை உணரவேண்டும். இந்த சிஷ்ய நெறியின் அனுபவமுடையவன் தான் பணம் பறிப்பதற்காக வேஷம் போடாத, ஆடம்பரமற்ற அனுபவ திட ஞானிகளிடம் பழகினதற்கான பூரணப் பயனை அனுபவப் பூர்வமாக அடைந்து உய்வான்.

எனவே அறத்துப் பால் கடவுள் வாழ்த்து அதிகாரமென்று வழங்குகின்ற கடவுள் விளக்க அதிகாரத்தின் பத்துக் குறளிலுள்ள எழுத்திலக்கணங் கடந்த லட்சியத்தை ஆராய்ச்சி, அனுபவப் பூர்வமாக உணர்ந்து உய்ய வேண்டுமென்ற உறுதியுடைய பக்குவிகள் இந்த சிஷ்யப் பண்பாடான நெறியை உள்ளத்தில்கொண்டு திடஞானிகளை அண்டி அவர்கள் வழியைப் பின்பற்றி ஜென்ம சாபல்யத்திற்கான ஜீவன் முக்தானுபவத்தே திளைப்பீர்களாக!

ஓம் தத்ஸத்.